# கச்சதீவு யாத்ரிகர்கள் திரும்பினர்: கவலை; ஏமாற்றம்

Registered as a News Paper in Ceylon விலை சதம் 15 ★ ★

ஈழநாடு சந்தா
வாரப் பதிப்பு
மூன்று மாதம் — ரூ. 4-00
ஆறு மாதம் — ரூ. 7-50
ஒரு வருடம் — ரூ. 14-00
முற் பணம் கட்ட வேண்டும்
தபால் அல்லது ஆள்மூலம் அனுப்பப்படும்.

# ஈழநாடு

THE EELANADU
National Tamil Daily

தபால் பெட்டி எண் 49
போன்: 389
மலர்: 12
இதழ்: 27
தேசிய தினசரி

ஈழநாடு சந்தா
தினப் பதிப்பு
மூன்று மாதம் — ரூ. 18-00
ஆறு மாதம் — ரூ. 34-00
ஒரு வருடம் ரூ. 66-00

யாழ்ப்பாணம் மாசி 26 ஜுல்ஹஜ் 30 திங்கட்கிழமை [9-3-70]

# பயணக்கஷ்டம்

யாழ்ப்பாணம், திங்கள் கச்சதீவுக்குச் சென்ற யாத்திரிகர்கள் நேற்றுக் காலை அங்கிருந்து புறப் பட்டுவிட்டனர். படகுகள் ஒவ்வொன்ருக கச்சதீவுக் கரையிலிருந்து யாழ்ப்பா ணக் குடாநாட்டுத்துறை களை நோக்கிப் புறப்பட் டன

இரண்டு மூன்றுதினங்க ளாக வானத்தில் வட்டமிட் டுக்கொண்டிருந்த இலங்கை விமானப்படை விமானங்க ளும் ஹெலிகாப்டர்களும் நேற்று நண்பகலுக்குப் பின் னர் சற்று ஓய்வெடுத்துக் கொண்டன

பாலைதீவுபடகுவிபத்தைத் தொடர்ந்துபலபடகுகளுக்கு லைசென்ஸ்' பெறுவதில் ஏற்பட்ட சுணக்கத்திஞலும் கடல் கொந்தளிப்பு, கடும் காற்று ஆகிய இடையூறுக ளிஞலும் கச்சதீவுக்கு உரிய நேரத்தில் செல்வதற்கு முடி யாமல் துறைகளில் இரண்டு மூன்று நாள் பசி, பட்டினி யோடு கடும் வெய்யிலில் தவங்கிடந்த பெருந் தொகையான யாத்திரிகர் கள் நேற்று முன்தினம்தான் கச்சதீவுக்குப் போய்ச் சேர் ந்தனர்

காலம்பிந்தி கச்சதீவு சென்றதால் அங்கு மேலதிக மாக இரண்டு தினங்கள் தங்குவதற்கு அனுமதி கிடைக்கலாமெனச் சிலர் நம்பியிருந்த போதிலும் முன்னர் அறிவிக்கப்பட்ட படி 8-ந் திகதி காலையில் அவர்கள் அங்கிருந்து புறப் படவேண்டி நேரிட்டது. இலங்கை யாத்திரி கர்கள் தங்கள் படகுக ளுக்கெதிராக கியூவில்நிற்க வேண்டுமென நேற்றுக் காலையிலேயே ஒலிபெருக்கி மூலம் அறிவிக்கப்பட்டது.

இந்தியாவிலிருந்து வந்து காத்திருந்த உறவினர்களைச் சந்தித்துப் பேசுவதற்குச் சென்ற பலரும் போதிய நேரம் கிடைககாததால் மிகுந்த ஏமாற்றத்துடனும் கவலையுடனும் திரும்ப வேண்டியதாயிற்று.

# தடம்புரண்ட வாகன்களை அகற்றும்போது விபத்து

## 8 தொழிலாளர் காயம்
## 4 பேர் ஆஸ்பத்திரியில்
## நாசவேலை பற்றி விசாரணை

யாழ்ப்பாணம் திங்கள்

மதவாச்சிக்கும் வவனியாவுக்குமிடையில் ஈரப்பெரியகுளம் என்ற இடத்திற்கருகாமையில் சென்ற வியாழக்கிழமை இரவு தடம் புரண்ட சரக்குவண்டியின் பெட்டிகளை அகற்றி போக்குவரத்துச் சேவையைச் சீராக்கும் வேலையில் ஈடுபட்டிருந்த தொழிலாளர் 8 பேர் மயிரிழையில் உயிர் தப்பினர். ஆயினும் அவர்களில் 4 பேர் அனுராதபுரம் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுச் சிகிச்சை பெற்று வருகின்றனர் மற்றும் 4 பேர் சிகிச்சைபெற்றபின் வீடு திரும்பினர்.

தடம்புரண்டு சேதமடை ந்த ஒரு 'வாகனை' பாதையி லிருந்து அகற்றுவதற்காக பாரந்தூக்கி எடுத்துத்தூக் கியபோது அது கட்டறுந்து கீழேவிழுந்தது. கீழே நின்ற வெள்ளைச்சாமி, இரா சையா, நாகலிங்கம், கப்புறு பண்டா ஆகிய நால்வரும் ஆஸ்பத்திரியில் அனுமதிக் கப்பட்டுச் சிகிச்சை பெற்று வருகின்றனர். சாமித்தம்பி, பார்சல்களை ஏற்பதற்கு நேற்று முன்தினம் மறுத்த யாழ்ப்பாண புகையிரத நிலையத்தினர் நேற்று நண் பகலின் பின்னர் பார்சல் களை ஏற்கத்தொடங்கினர்

# மகாவலி 'டெண்டர்' யாருக்குக் கிடைக்கும்?

## இலங்கை அதிகாரிகள் வாஷிங்டன் பறக்கிறார்கள்

கொழும்பு, ஞாயிறு மகாவலி திசைதிருப்பும் திட்டத்தை நிறைவேற்று வதற்கான 'டெண்டர்' சம் பந்தமாக உலக வங்கியுடன் ஆலோசனைகள் நடத்து வதற்காக இரு உயர்தர அதிகாரிகளை இலங்கை அர சாங்கம் வாஷிங்டனுக்கு அவசரமாக அனுப்பி வைத் திருக்கிறது.

[illegible]ப்பாசன இயக்குனர் தி[illegible]வி என். ராஜரட்ணம் கா[illegible] நீர்ப்பாசன மின்சார அமைச்சின் சிரேஷ்ட உதவி செயலாளர் திரு. ரி. சிவ ஞானம் [illegible] இந்த [illegible] மகாவலிதிட்ட சபையின் '[illegible]டர்' சம்பந்தமான ஆலோசனைகள் நடத்திய பின் அறிக்கை சமர்ப்பித்திருக்கிறது. இந்த அறிக்கையை அமைச்சரவை ஆராய்ந்தது.

[illegible] சபையின் அமெரிக்க ஆலோசகர்கள் டெண்டரை 'டுமேஸ்' என்ற பிரஞ்சு ஸ்தாபனத்துக்கு கொடுக்க வேண்டும் என்று சிபாரிசு செய்திருக்கிருர்கள்.

இலங்கையிலிருந்து செல் லும் இரு அதிகாரிகளும் இலங்கையின் கருத்தை உலகவங்கி அதிகாரிகளுக்கு எடுத்து விளக்குவார்கள் என்று தெரிகின்றது.

உலக வங்கி அதிகா[illegible]களு டன் ஆலோசனைகள் [illegible]த் தியபின் மார்ச் பத்தாம் திக திக்கு முன் இவர்கள் நாடு [illegible] விடுவர் என்றும் அவர்கள் வந்தபின் மந்திரி சபையின் டெண்டரை யாருக்கு கொடுப்ப[illegible]ன்

# கூட்டுறவு ஊழியர் கோரிக்கை வெற்றி

## மாவட்டக் குழுக்களை நியமிக்க மந்திரி சம்மதம்

யாழ்ப்பாணம், திங்கள் இலங்கைக் கூட்டுறவுஊழி யர்களின்கோரிக்கை வெற்றி பெற்றுவிட்டதென்று கூட் டுறவு ஊழியர் சங்கத்தைச் சேர்ந்த ஒருவர் தெரிவித் தார். உணவு விவசாய அமைச்சர் திரு எம் டி பண் டாரவை கூட்டுறவு ஊழியர் சங்கப் பிரதிநிதிகள் சந்தித் துப் பேச்சுவார்த்தை நடத் தியபோது ஊழியரின் முக் கிய கோரிக்கைக்கு அவர் இணக்கம் தெரிவித்து விட்ட தாகவும் இது தங்களுக்குக் கிடைத்த வெற்றியென்றும் அவர் சொன்னுர்.

இதனுல் கூட்டுறவு ஊழி யர்உத்தேசித்திருந்த நேரடி நடவடிக்கை கைவிடப்பட் டிருப்பதாகத் தெரிகிறது

கூட்டுறவுஊழியரை அந்தி யான முறையில் நீக்குதல், தண்டித்தல், இடமாற்றம் செய்தல் போன்றவற்றை

கோரிக்கையை ஏற்றுக் கொண்ட அமைச்சர் இம் மாதம் 20-ந் திகதிக்கு முன் னர் இக்குழுக்களை நியமிப்ப தாக சங்கப் பிரதிநிதிகளி டம் உறுதியளித்திருக்கிருர்.

# மட்டுவில் புதிய மின்சாரத் திட்டம்

## ஸ்ரீகாந்தா ஆரம்பித்து வைத்தார்

மட்டுவில் சனி 'அடுத்த சிவராத்திரி தினத்திற்குள், மட்டு வில் மின்சார விநியோ கத்திட்டம், மட்டுவில் பன் றித்தலைச்சி அம்மன்கோவிலு க்கும் விஸ்தரிக்கப்படடால், அத்தோடு மட்டும் எமது இலாகா பொறியியலாளர் கள் திருப்தி அடைந்து விடமாட்டார்கள் மேலும், அடுத்துள்ள பகுதி மக்களும் டையச் செய்ய முடியும் என்று ஆராய்ச்சி செய்யும் பெருநோக்குடையவர்' எனவே, இவர்களால் அடு த்த சிவராத்திரிக்கு, பன் றித்தலைச்சி அம்பாளுக்கும் மின்சாரம் அளிப்பது சுல பம் என எண்ணுகிறேன் என்று அவர் மேலும் கூறி ஞர்.

திரு. நவரத்தினம் எம்.பி. பேசுகையில், கிராமமின்சார

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வருகின்றனர் மற்றும் 4 பேர் சிகிச்சைபெற்றபின் வீடு திரும்பினர்.

தடம் புரண்டு சேதமடைந்த ஒரு 'வாகனை' பாதையிலிருந்து அகற்றுவதற்காக பாரந்தூக்கி எடுத்துத்தூக்கியபோது அது கட்டறுந்து கீழேவிழுந்தது. கீழே நின்ற தொழிலாளர் அங்கிருந்து நகர்ந்து கொண்டனர். ஆயினும் வாகன் விழுந்தவேகத்தில் சிலிப்பர் கட்டைகளும் கற்களும் சிதறித் தொழிலாளரைத் தக்கியதாக்கிக் காயப்படுத்தின.

காயமடைந்த 8 தொழிலாளரும் உடனடியாக அனுராதபுரம் ஆஸ்பத்திரிக்கு எடுத்துச் செல்லப்பட்டனர் வெள்ளைசாமி, இராசையா, நாகலிங்கம், கப்புறு பண்டா ஆகிய நால்வரும் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுச் சிகிச்சை பெற்று வருகின்றனர். சாமித்தம்பி, கோபால் மரியநாயகம், டியரேனிஸ் ஆகிய தொழிலாளர் சிகிச்சை பெற்று வீடு திரும்பினர்.

### சேவை சீரானது

சரக்குவண்டி தடம்புரண்டதால் சீர்குலைந்த கொழும்பு யாழ்ப்பாணம் ரயில் போக்குவரத்துச் சேவை நேற்று நண்பகலுடன் சீர் செய்யப்பட்டுவிட்டது.

பார்சல்களை ஏற்பதற்கு நேற்று முன்தினம் மறுத்த யாழ்ப்பாண புகையிரத நிலையத்தினர் நேற்று நண்பகலின் பின்னர் பார்சல்களை ஏற்கத்தொடங்கினர்

ரயில் தடம் புரண்டது பற்றி ரயில்வேப் பகுதியினர் தொடர்ந்து விசாரணை செய்து வருகின்றனர் இதே வமயம் இந்த விபத்துக்கு நாசவேலைதான் காரணமா என்பது பற்றியும் இதில் சம்பந்தப் பட்டவர்கள் பற்றியும் இரகசியப் பொலிசார் புலன் விசாரணை ஆரம்பித்திருப்பதாகவும் அறியப்படுகிறது.

# நெடுந்தீவிலும் ராணுவதாக்குதல்

## இளைஞர் படுகாயம்; கிராமசேவகருக்கு செருப்படி; கடலுக்குள் பெண்கள்

யாழ்ப்பாணம், திங்கள் நெடுந்தீவுத் துறையில் நேற்றுச் சிலர், சிவில் உடை அணிந்ததாகக் கருதப்படும் இராணுவத்தினரின் தாக்குதலுக்குள்ளானதாகப் புகார்செய்யப்பட்டுள்ளது.

நமசிவாயம் பசுபதி (20 வயது) என்ற இளைஞர், 15 பேர் கொண்ட ஓர் இராணுவக் கோஷ்டியினரால் நேற்று நண்பகல் படுமோசமாகத் தாக்கப்பட்டு உடனடியாக நெடுந்தீவு ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டாராம்,

நெடுந்தீவு கிராமசேவகரும் தாக்கப்பட்டாராம். அவர் அணிந்திருந்த செருப்பைக் கழற்றியே அவரை இராணுவத்தினர் தாக்கியதாகப் புகாரில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நெடுந்தீவு கிராமசபைத் தலைவர் திரு. அம்பலத்தின் கைக்கடிகாரத்தைப் பறித்துக்கொண்டுவிட்டதாகவும், துறையில் நின்றுகொண்டிருந்த பெண்கள் சிலர் கடலுக்குள் தள்ளி விழுத்தப்பட்டதாகவும் புகாரில் கூறப்பட்டுள்ளது.

இராணுவக் கோஷ்டியின் தலைவர் இல்லாத சமயத்திலேயே இந்தத் தாக்குதல் நடந்ததாம்.

இத்தாக்குதல் சம்பந்தமாக உடனடி நடவடிக்கை மேற்கொள்ளும்படி பிரதமருக்கு அவசரத் தந்தி ஒன்று அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. பொலிஸ் இன்ஸ்பெக்டர் ஜெனரல், இராணுவத் தளபதி, வடபகுதி பொலிஸ் சுப்பிரிண்டன், ஊர்காவற்றுறை, யாழ்ப்பாணம், கிளிநொச்சி, காங்கேசன்துறை எம். பி.க்களுக்கும் தந்திகள் அனுப்பப்பட்டுள்ளன.

# ஐக்கிய லாபநிதி

## வாடிக்கைக்காரர் கூட்டம்

யாழ்ப்பாணம், திங்கள் யாழ்ப்பாணம் ஐக்கிய லாபநிதி வாடிக்கைக்காரர்களின் கூட்டமொன்று நேற்றுக்காலையில் கஸ்தூரியார் வீதியிலுள்ள 145 இலக்க வீட்டில் நடைபெற்றது.

இந்த ஸ்தாபனத்தின் வாடிக்கைக்காரர்களின் விபரங்களை பிரதேசவாரியாக சேகரிப்பதென்றும் வாடிக்கைக்காரர்கள் தமது விபரங்களை தெரிவிக்கும் விதத்தில் பிரதேசவாரியாக பிரதிநிதிகளை நியமிப்பதென்றும் கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டது. இந்த ஸ்தாபனத்தின் வாடிக்கைக்காரர்கள் தமது பிரதேசத்துக்குரிய பிரதிநிதிகளுடன் தொடர்பு கொண்டு தமது விபரங்களைத் தெரிவிக்கும்படி கோரப்பட்டுள்ளனர். பிரதேசவாரியாக தெரிவு செய்யப்பட்ட பிரதிநிதிகளிலிருந்து செயற்குழுவொன்றும் தெரிவு செய்யப்பட்டது. பிரதேசவாரியாகத் தெரிவு செய்யப்பட்ட பிரதிநிதிகளின் விபரம் வருமாறு:

அச்சுவேலி: என் கதிரவேற்பிள்ளை, எஸ் சோமசுந்தரம். ஆனைக்கோட்டை: எஸ் கனகசபை, எஸ் இராசா. உரும்பராய்: என் பொன்னுத்துரை, கே நாகலிங்கம். உடுவில்: கே காசியர். சாவகச்சேரி: எஸ் முரு

(4-ம் பக்கம் பார்க்க)

# சைப்பிரஸ் அதிபர் கொலைமுயற்சிதோல்வி

நிக்கோசியா, மார்ச் 8 சைப்பிரஸ் அதிபர் அதிமேற்றிராணியார் மக்காறியாவை இன்று கொலைசெய்யும் முயற்சி தோல்விஅடைந்தது.

ஹெலிகொப்டரில் அவர் பறந்துகொண்டிருந்தபோது பூமியிலிருந்து துப்பாக்கிக் குண்டுகள்ஹெலிகொப்டரை நோக்கிப் பாய்ந்தன.

அதிபருக்குப் பதிலாக அக்குண்டுகள் விமானத்தை ஓட்டிக்கொண்டிருந்த விமானியைப் பதம் பார்த்தது, எனினும் விமானி நிககோசியா வீதியொன்றில் ஹெலிகொப்டரைப் பத்திரமாக இறககினர்.

விமானி ஆபத்தான நிலையிலுள்ளார்.

அமைச்சின் சிரேஷ்ட உதவி செயலாளர் திரு. ரி. சிவஞானம் ஆகியவர்களே இந்த இரு அதிகாரிகள்.

மகாவலிதிட்ட சபையின் 'டெண்டர்' சம்பந்தமான குழு யூகோஸ்லாவிய இங்கிராஸ் நிறுவனத்தை சிபாரிசு செய்திருக்கின்றது.

...டன் ஆலோசனைகள் நடத்தியபின் மார்ச் பத்தாம் திகதிக்கு முன் இவர்கள் நாடு திரும்பி விடுவர் என்றும் அவர்கள் வந்தபின் மந்திரி சபையின் டெண்டரை யாருக்கு கொடுப்பது என்பதுபற்றி முடிவு செய்வார்கள் என்றும் எதிர்பார்க்கப்படுகின்றது. சீ.பி.ஏ.

அயூப் ஆட்சியில்

# லஞ்சம் வாங்கிய 35 அதிகாரிகளுக்கு 'கல்தா'

## யாஹ்யாகான் நடவடிக்கை

ராவல்பிண்டி, மார்ச் 8 பாகிஸ்தானில் அயூப்கான் ஜனாதிபதியாகவிருந்தபோது லஞ்சம் வாங்கியதாகவும் வேறு ஊழல்களில் ஈடுபட்டதாகவும் 35 உயர்தர அரசாங்க அதிகாரிகளை தற்போதைய ஜனாதிபதி ஜெனரல் யாஹ்யாக்கான் வேலை நீக்கம் செய்திருக்கிறார்.

இதே குற்றத்துக்கான வேறு பதினொரு அதிகாரிகளும் கட்டாய ஓய்வில் அனுப்பப்பட்டிருக்கிறார்கள்.

லஞ்ச ஊழல்களிலும் இதர மோசடிகளிலும் சம்பந்தப்பட்டதாக 303 அதிகாரிகள் காவலில் வைக்கப்பட்டு கடந்த டிசம்பர் முதல் ராணுவ சட்டத்தின் கீழ் விசாரணை செய்யப்பட்டு வந்தார்கள். இவர்களில் நால்வர் மட்டுமே மீண்டும் வேலையில் அமர்த்தப்பட்டனர். ஏனையவர்கள் மீதான குற்றச் சாட்டுகள் தொடர்ந்து விசாரிக்கப்பட்டுவருகின்றன.

0 0 0

தாயகம் திரும்புவோருக்கு வசதி

# கப்பல் போக்குவரத்து சீராக நடைபெறும்

## கொழும்பில் ஒப்பந்தம்

கொழும்பு, ஞாயிறு இலங்கை - இந்திய ரயில்-கப்பல் சேவைகளை சீராக நடத்துவதற்கு நடவடிக்கை எடுப்பதென இருநாடுகளும் முடிவுசெய்திருக்கின்றன.

சிறிமா-சாஸ்திரி ஒப்பந்தத்தின் கீழ் இந்திய பிரஜாவுரிமை பெற்ற இந்திய இனத்தவர்கள் பெருவாரியாக தாயகம் திரும்பவிருப்பதை உத்தேசித்து இந்த சேவைகளை சீர்படுத்துவற்கு இரு நாடுகளும் முன்வந்திருக்கின்றன,

இதுசம்பந்தமாக இருநாடுகளையும் சேர்ந்த ரயில்வே-கப்பல்துறை அதிகாரிகள் கொழும்பில் பேச்சுவார்த்தைகள நடத்தியபின் உடன்படிக்கை யொன்றை செய்துகொண்டிருக்கிறார்

இந்த ஆண்டில் மாத்திரம் சுமார் 20 ஆயிரம் இந்திய இனத்தவர்கள் தாயகம் திரும்புவார்களென்று எதிர்பார்க்கப்படுகின்றது.

கொழும்பில் இடம்பெற்ற பேச்சுக்களில் இந்திய கோஷ்டிக்கு தென்னிந்திய ரெயில்வே பொதுமுகாமையாளர் திரு. பி ஐ, மெத்தியு தலைமைவகித்தார்.

இவர்களுக்கிடையில் செய்து கொள்ளப்பட்டிருக்கும் ஒப்பந்தத்தின் படி வாரத்தில் மூன்று தடவைகள் இலங்கைக்கும் இந்தியாவுக்குமிடையில் கப்பல் போக்குவரத்து இடம் பெறலாம் என்று தெரிகின்றது. சி. பி. ஏ.

### காசநோயால் பாதிக்கப்பட்டவர்களுக்கு சிகிச்சை

கோட்டை, திங்கள் சுகாதார இலாகா எடுத்துக்கொண்டுள்ள கணக்கெடுப்பில் சுமார் 25,000 மக்கள் காசநோயினால் பாதிக்கப்பட்டுள்ளனர். எனத்தெரியவருகிறது. கிராமப்புறங்களில் வாழும் இம் மக்கள் தகுந்த சிகிச்சை பெறுவதற்கு அரசாங்க வைத்தியசாலைகளுக்கு அறிவிக்கவில்லை என்றும் கள் அவர்கள் அறிவிக்கும் வரை தாட்கள் காத்திருக்கப் போவதில்லை என்றும் ஒவ்வொரு கிராமங்களிலும் வீடுவீடாகச் சென்று சிகிச்சை அளிப்பது என சுகாதார இலாகா பிரசார சபை தெரிவித்துள்ளது.

இதனால் கூட்டுறவு ஊழியர் உத்தேசித்திருந்த நேரடி நடவடிக்கை கைவிடப்பட்டிருப்பதாகத் தெரிகிறது

கூட்டுறவுஊழியரை அநீதியான முறையில் நீக்குதல், தண்டித்தல், இடமாற்றம் செய்தல் போன்றவற்றை அகற்றும் நோக்குடன் ஒவ்வொரு மாவட்டத்துக்கும் ஒருசபையை நியமிக்கும்படி ஆணைக்குழுசெய்துள்ள சிபார்சை நிறைவேற்றும்படி ஊழியர் சங்கம் முக்கியமாகக் கோரிவந்தது. இந்தக்

# புதிய 5 ரூபா நோட்டு

கோட்டை, திங்கள் இப்போது நடைமுறையிலுள்ள 5 ரூபா நோட்டைவிட புதிதான 5 ரூபா நோட்டு கூடிய விரைவில் வெளிவரும் என இலங்கை மத்திய வங்கி அறிவித்துள்ளது. பொலநறுவ மகா பராக்கிரமபாகுவின் சிலை வழமைபோலிருக்கும். 'ஸ்ரீ லங்கா மகா பங்குவ'' என்ற சிங்கள வாக்கியம் ஆங்கிலத்திலும் தமிழிலும் மொழி பெயர்த்து இந்த நோட்டில் அச்சிடப்பட்டிருக்கும். இதுவே இந்த 5 ரூபாய் நோட்டில் காணப்படும் புதிய அம்சம்.

# நுணுவில்கிழக்கில் மாதர் மாநாடு

மட்டுவில், ஞாயிறு ''நாட்டின் சகல உயர்வுக்கும் பெண்கள் பெரும்பங்கு கொண்டு உழைக்க வேண்டும். அரசியல், சமுதாயம் ஆகிய எல்லாவற்றிலும் ஆண்களோடு பெண்களும் ஒத்துழைத்தால்நாடுசுபிட்சமடையும். இதற்குத்தாய்க்குலம் முன்வரவேண்டும்'' இவ்வாறு நுணுவில் வடக்கில் நடைபெற்ற மாதர் மாநாட்டில் தலைமைவகித்த திருமதி ஆராஜபூபதிஅருணாசலம் குறிப்பிட்டார் இவ் விழாவில் ஆட்சிமன்றஉறுப்பினர் திரு வி. என். நவரத்தினம், திருமதி அருளம்பலம், திருமதி என். அருணாசலம் ஆகியோரும் உரை ஆற்றினர்.

### பதவிஉயர்வு

பண்டத்தரிப்பு, ஞாயிறு இளவாலை கன்னியர்மடத்திலிருந்து இடமாற்றம் பெற்ற மேற்படி கன்னியர் மடதாயார்சங். எவுலாலியா திருக்குடும்பகன்னியர் சபையின் உயர் பதவி ஒன்றைப் பெற்றுள்ளார். யாழ்ப்பாண திருக்குடும்ப கன்னியர்மடத்தில் இதற்கான விசேட நிகழ்ச்சிகள் நடைபெற்றன.

...த்திட்டம், மட்டுவில் பன்றித்தலைச்சி அம்மன்கோவிலுக்கும் விஸ்தரிக்கப்படடால், அத்தோடு மட்டும் எமது இலாகா பொறியியலாளர்கள் திருப்தி அடைந்துவிடமாட்டார்கள் மேலும், அடுத்துள்ள பகுதி மக்களும் மின்சாரம் பெறுவதற்கான வழிகளை அவர்கள்செய்வார்கள்.

நுணுவிற் சந்திக்கு அருகாமையில் புதியமட்டுவில் மின்சார விநியோகத் திட்டத்தை, அங்குரார்ப்பணம் செய்துவைத்துப் பேசிய காணி, நீர்பாசன, மின்சார அமைச்சின் நிதந்தரச் செயலாளர் திரு.எம். ஸ்ரீகாந்தா மேற்கண்டவாறு கூறினார். சாவகச்சேரி ஆட்சிமன்ற உறுப்பினர் திரு. வ. ந. நவரத்தினம், இந்த வைபவத்திற்குத் தலைமை தாங்கினார்.

திரு. ஸ்ரீகாந்தா தொடர்ந்து பேசுகையில் இமயம் முதல் குமரிவரை இன்று இந்துக்கள் போற்றிக்கொண்டாடும் ஒரு புனித தினம் தான் சிவராத்திரி. இப்படியான புனிதமான தினத்திலே, இந்த ஊரை ஒளிமயமாக்குவதிலிருந்து, இந்த ஊரின் எதிர்காலம் சிறந்த ஒளிமயமாக அமையும் என்பதில் ஐயமில்லை என்றார்.

எமது இலாகாவிலுள்ள பொறியியலாளர்கள் அனைவரும் தமது கடமையிற் கண்ணும் கருத்துமாக இருப்பது மட்டுமல்ல ஒதுக்கப்பட்டதைக் கொண்டு, அதிகப்படியான பொதுமக்களுக்கு எப்படி எப்படி பயன ...த சிவராத்திரிக்கு. பன்றித்தலைச்சி அம்பாளுக்கும் மின்சாரம் அளிப்பது சுலபம் என எண்ணுகிறேன் என்று அவர் மேலும் கூறினார்.

திரு. நவரத்தினம் எம்.பி. பேசுகையில்,கிராமமின்சார விநியோகத்திட்டத்தின் கீழ் எனது தொகுதியில் 5 கிராமங்கள் சேர்க்கப்பட்டன அதில், மீசாலை கிராமத்திற்கு, மஸ்கேலியாதிட்டம் வரும்வரை பொறுக்கும்படி கேட்டுக்கொண்டுள்ளார்கள். ஏனைய மூன்று திட்டங்களுக்கு மின்சார விநியோகம் நடைபெற்று விட்டது. இத்திட்டத்தின் படி ஆரம்பத்தில் வீடுகளுக்கு மட்டுமே விநியோகம் செய்கிறார்கள். தொடர்ந்து வீதிகளுக்கான ஒழுங்குகள் செய்யப்படும் என்றும் ஆனால் வீதிகளில் உள்ள சந்திகளுக்கும் இப்பொழுதும் வெளிச்சம் ஏற்றப்படுமென்றார்.

மின்சாரஎன்ஜினியர் திரு. எஸ். இராஜதேவாவும் பேசினார். மட்டுவில் வேரக்கேணி கந்தசாமிகோவிலில் விசேஷ பூசை ஆராதனைகளுடன் திரு. ஸ்ரீகாந்தா, திரு. நவரத்தினம் எம் பி உட்பட சகலரும் ஊர்வலமாக, மின்சார நிலையத்திற்கு அழைத்துச் செல்லப்பட்டனர். மெய்கண்டான் அதிபர் திரு. இரத்தினசபாபதியும் இதில் பங்கெடுத்துக் கொண்டார். திரு. ஸ்ரீகாந்தா இதன் முக்கிய மின்விசையை அமுக்கி மின்சார அங்குரார்ப்பணம் செய்துவைத்தார் திரு. கே. ஸி. ஆறுமுகம் நன்றி கூறினார்.

# கிழக்கிலங்கை தமிழாசிரியர் சங்கத் தீர்மானங்கள்

யாழ்ப்பாணம், திங்கள் திருக்கோணமலையில் ஆசிரியர் பற்றுக்குறை எக்காலமும் இருந்துவருவதால் பொதுமாற்றம் நடைபெறும் காலத்தில் இப்பகுதிக்குக் கூடுதலான ஆசிரியர்களை அனுப்ப வழிசெய்ய வேண்டுமென்றும், திட்டமிடப்பட்ட இடமாற்றத்தினால் ஆசிரியர்கள் தமது சொந்தமாகாணங்களை விட்டு வெளியே கடமையாற்றும் காலத்தில் தன்னம்பிக்கையுடன் கடமையாற்றுவார்கள்என்பதால் அவ்வித மாற்றம் அவசியமென்றும் பாடசாலைகளை சுவீகரித்ததன் பின் நடைபெற்ற பொது இடமாற்றத்தில் வெளிமாகாணங்களுக்கு மாற்றப்பட்ட ஆசிரியர்களை அவர்களது ஏழுவருடசேவை பூர்த்தியானதும் 1770 லேயே அவரவர் இடங்களுக்குத் திருப்பிமாற்றவேண்டுமென்றும் கோரும் தீர்மானங்கள் கிழக்கிலங்கைத் திருக்கோணமலைத் தமிழாசிரியர் சங்க நிருவாகசபைக்கூட்டத்தில் நிறைவேற்றப்பட்டன.

பதவி உயர்ச்சியளிக்கப்படும் போது பின்தங்கிய இடமான இப்பகுதியிலிருந்து பதவி உயர்ச்சிபெறும் ஆசிரியர்களைக் கூடுமானவரை இப்பகுதியிலேயே நியமிக்கவேண்டுமென்றும் 3-ந்தர அதிபர்பதவி உயர்ச்சியில் ஓரளவு வீதமானவர்களைச் சுயபாஷை ஆசிரியர்களிலிருந்து தெரிய வேண்டுமென்றும், வட்டாரக்கல்வி அதிகாரிகள் விண்ணப்பம் கோரும்போது இத்தீர்மானங்களை அகில இலங்கைத் தமிழ் ஆசிரியர்சங்கத்தின் மூலம் மாவித்தியாதிபதியை சங்கம் வேண்டியுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வரி விளம்பரம்

**விற்பனைக்கு**

வீடு வளவு

சுண்டிக்குளி மகளிர் கல்லூரிக்கு அருகாமையில் 3 பரப்பு காணியில் சகல வசதிகளுடன் கட்டப்பெற்ற வீடு வளவு விற்பனைக்குண்டு. விபரங்களுக்கு: எஸ். இராசரெத்தினம், C/o சுந்தரம் பிறதர்ஸ், 73, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்.

1659


## சூட்டிங்ஸ்ரார் வெற்றி

சுழிபுரம், ஞாயிறு

சுழிபுரம் சூட்டிங்ஸ்ரார் கோஷ்டிக்கும், அராலி நாகேந்திரமட விளையாட்டுக் கோஷ்டிக்குமிடையே நடைபெற்ற கிரிக்கெட் போட்டியில் சுழிபுரம் சூட்டிங்ஸ்ரார் கோஷ்டியினர் ஒரு இன்னிங்சாலும் 59 ஓட்டங்களாலும் வெற்றி பெற்றனர். போட்டி அராலி இந்துக்கல்லூரி விளையாட்டு மைதானத்தில் நடைபெற்றது.


வல்வெட்டித்துறை
றஞ்சனா தியேட்டர்
தினசரி: 6-30, 9-30
அசோகன் - சந்திரகாந்தா
நடித்த
**இது சத்தியம்**

ஸ்ரீ காலிங்கன்
இணுவில்
தினசரி 6-30 9-30
பிறிப்போயா, போயா 2-30 மணி
எம். ஜி. ஆர். - சரோஜாதேவி
நடித்த
**ஆசைமுகம்**

ராஜா யாழ்ப்பாணம்
தினசரி 2-30, 6-30, 9-45 மணி
போயா, பிறிப்போயா 10-30 மணி.
சிவாஜி, ஜி. வரலட்சுமி
எம். என். நம்பியார்
மற்றும் பலர் நடித்த
**ஹரிச்சந்திரா**

உங்களை மகிழ்விக்க பவனி வருகிறார்கள்
எம். ஜி. ஆர் - ஜெயலலிதா
**காதல் வாகனம்**
வின்ஸரில்
தினசரி 4 காட்சிகள்

வெற்றிகரமான 2 வது மாதம்
கெப்பிட்டல் (கொழும்பு)
பிளாஸா (வெள்ளவத்தை)
**வெலிங்டன்** யாழ்ப்பாணம்
தினசரி பி ப 2-30, மாலை 6-30, இரவு 9-30 மணி
1968-ம் ஆண்டின் சிறந்த படத்திற்குரிய
ஜனதிபதியின் பிராந்தியப் பரிசு பெற்ற
வெற்றிச்சித்திரம்





## வட இலங்கை சங்கீத சபை பரீட்சை முடிவுகள்

யாழ்ப்பாணம், திங்கள்

வட இலங்கை சங்கீத சபையின் 1969ம் வருட பரீட்சை முடிவுகளின் தொடர்ச்சி வருமாறு:

இரண்டாம்பகுதி:

### திருக்கோணமலை

முதலாம் பிரிவு-ஸி

சந்திராதேவி சண்முகரத்தினசர்மா, வாய்ப்பாட்டு.

### மட்டக்களப்பு

சாந்தமலர் சாமித்தம்பி, வாய்ப்பாட்டு.

### யாழ்ப்பாணம்

ஜெயலோசினி சுப்பிரமணியம், வாய்ப்பாட்டு. ஜானகி செல்வரத்தினம், வயலின்.

### தெல்லிப்பளை

சுலோசனு தம்பிராசா, வாய்ப்பாட்டு. சுப்பிரமணியம் வாய்ப்பாட்டு.

### பருத்தித்துறை

இராமநாதன் கல்யாணசுந்தரக்குருக்கள், வாய்ப்பாட்டு.

### கொழும்பு

சாதாரண பிரிவு ஸி-

பகீரதி விஸ்வநாதன், புல்லாங்குழல். வாமி சுலோச்சனு சோமசுந்தரம் வீணை. சுஷமா சிவகுருநாதன் வயலின். சுகன்யா சுப்பிரமணியம் வீணை. சிவானந்தி பசுபதி வீணை. சரோஜினி ஐயாத்துரை வீணை. திலகன் கனகரத்தினம் இராசையா புல்லாங்குழல். ஞானசௌந்தரி சுப்புராயபிள்ளை வயலின். பத்மினி கனகரத்தினம் வாய்ப்பாட்டு. ரவிராஜ் வேலாயுதம்பிள்ளை வாய்ப்பாட்டு. ரேணுகா பாலசுந்தரம் வாய்ப்பாட்டு சரஸ்வதி நமசிவாயம் வயலின். சுமங்கலா தனபாலசுந்தரம் வாய்ப்பாட்டு. உமராணி நடராசா வாய்ப்பாட்டு. சுபகாந்தி அப்பாக்குட்டி வாய்ப்பாட்டு சகுந்தலா ஆறுமுகம்பிள்ளை வாய்ப்பாட்டு. பரமேஸ்வரி இரத்தினம் வாய்ப்பாட்டு. உஷா சேனுதிராசா வயலின் இந்துமதிகுமாரசாமி வாய்ப்பாட்டு. சுகந்தி பிரான்சிஸ் வீணை. இளவேணி நவரத்தினம்வாய்ப்பாட்டு, பிரேமாவதி தியாகராசா வாய்ப்பாட்டு. சியாமளா சந்திரசேகரம் வயலின்,

வாய்ப்பாட்டு: ஜயந்தி சங்கரப்பிள்ளை, வாசுகி சண்முகம்பிள்ளை, மேரி ஜோசெபின் மைக்கல, மல்லிகாதேவி இராசையா (வயலின்), வாசுகி சங்கரலிங்கம் அருந்ததி சங்கரலிங்கம், மகேசன் சபாநடேசர், புல்லாங்குழல், சாந்தினி வேலா

நேசம் வயலின், இரதினி கணபதிப்பிள்ளை. வயலின்.

### யாழ்ப்பாணம்

சாதாரண பிரிவு-ஸி

வயலின்:- பாலகுமார் இராசையா, நந்தியாவதி நல்லதம்பி, பூபதி நல்லதம்பி,

வாய்ப்பாட்டு;- ஸ்ரீதேவி நல்லதம்பி, சரோஜினிதேவி தர்மலிங்கம் சந்திராதேவி மார்க்கண்டு, பார்ப்பரு பாக்கியநாதன், தனலட்சுமி முத்துச்சாமி, கொன்செப்ரா செல்லத்துரை, சம்பந்தராணி ஆறுமுகம் இரஞ்சிதமலர் செந்தில்ராசா, இராஜலக்ஷ்மிசிவசுப்பிரமணியக் குருக்கள், சரோஜா இராசையா, யோகராணி சின்னப்பா. சாந்தினி சின்னத்துரை, சுசீலா சின்னத்துரை, சாந்தினி நடராசா, கருணகலாவல்லி செல்லத்துரை, திருக்குமார் திருநாவுக்கரசு, இராசமலர் இராசகுலசிங்கம், சுபாஷனி மீனுட்சிசுந்தரம், நித்தியகாந்தி ராமநாதன், சந்திரிகா சுப்பிரமணியம், நிரஞ்சனி இராமநாதன், கௌரிதேவி வேலாயுதபிள்ளை, வயலின்). சாந்தினி இரட்ன சிங்கம் (வயலின்), ரஜனி பஞ்சாட்சரம்வாய்ப்பாட்டு. மேகலாயோகினி வைத்திலிங்கம் வீணை, பிரபாலினி சோமசுந்தரம் வீணை, கௌரி திருநாவுககரசு வயலின்,

தேவமனேகரி திருநாவுக்கரசுவாய்ப்பாட்டு, மோகனகாந்தன் கந்தையா சாயாதேதி கந்தையா (வயலின்) வசந்தமலர் சண்முகம் (வயலின்), அமிர்தாம்பிகை வெற்றிவேலு, சாந்தினி அரசரத்தினம் வீணை, பத்மினி அரசரத்தினம் வாய்ப்பாட்டு (வயலின்) வனிதஜோதி குமாரசாமி, பவானி சண்முகலிங்கம், ஜெயதேவி, விஜயரட்ணம் வயலின், விமலராணி சின்னத்துரை வாய்ப்பாட்டு, சிவயோகி நவரத்தினம் (வயலின்) மஞ்சுளாதேவி துரைசிங்கம் வாய்ப்பாட்டு, தவயோகி கணபதிப்பிள்ளை, யசோதரா கந்தசாமி, பிரபா சந்திரசேகரா, வசந்தகௌரி சண்முகராசா, சிவநங்கை புத்திரசிங்கம், சத்தியபாமா மயில்வாகனம் வயலின் ரஜினி இம்மானுவேலல், திரேசம்மா அற்புதம், ராமினி துரைசாமி வாய்ப்பாட்டு, கல்யாணி நடராசா வாய்ப்பாட்டு இந்திராணி மாரிமுத்து, ரஞ்சினி சோமசுந்தரம், விஜய

மலர் சிவசம்பு, ராகினி நடராசா, மேரி ஜெயராணி ஞானப்பிரகாசப், கார்த்திகாயனி கதிர்காமதாசன், சுஜனி துரைசிங்கம் (வயலின்), தயாபரி இளையதம்பி, ரதி ஞானசம்பந்தர் (வயலின்). நளாயினிதேவி நடராசா (வயலின்), நிமலவாகினி கந்தசாமி இராசா, ரஞ்சனி கந்தையா, ஈஸ்வரிதேவி கந்தையா, கருணம்பாள் கணேசன்.

### பருத்தித்துறை

சாதாரணபிரிவு-ஸி

வாய்ப்பாட்டு

மனேகரி அற்புதநாதன் சுபத்திராதேவி குணவர்த்தனம், இந்திரகுமாரி, நடராசா, கல்யாணி ரத்னசாமி அன்னலக்ஷிமிதேவி கந்தப்பு. புவனேஸ்வரி, வேலுப்பிள்ளை மீரா சுப்பிரமணியம், ரதிவதனு கந்தப்பு சாஸ்திரப் பரீட்சையில் விசேஷ சித்தி பாக்கியம் வீரகத்தியார் (வயலின்).

### சாவகச்சேரி

சாதாரணபிரிவு-ஸி

வாய்ப்பாட்டு

சாந்தினி கந்தையா, சரோஜினிதேவி கனகசபை, (வயலின்) சரோஜினிதேவி முருகேசு, (வயலின்), விஜயகுலராணி சுப்பிரமணியம் கமலேஸ்வரி சுப்பிரமணியம், தேவமனேகரி ஐயாத்துரை வயலின்) புஷ்பராணி மாணிக்கம்

(தொடரும்)

## சரஸ்வதியின் பிரிவு



விதி என்பது மனிதனை ஒரே உருவத்தில் அணுகுவதில்லை. நியதியின் பாற்பட்டு இயங்கும் விதியின் சொருபம் எங்கே எப்போது வெளிப்படும் என்பதை அறிந்தவர் யார்?

வழமைமப்படி தன்னுடைய உத்தியோகக் கடமைகளை முடித்துக்கொண்டு வீட்டுக்குச் செல்கின்றவர்

கிரிக்கெட்

## சென். ஜோன்ஸ் வெற்றி

யாழ்ப்பாணம், திங்கள்

யாழ். மத்திய கல்லூரி மாணவர் தலைவர்கள் கிரிக்கெட் கோஷ்டிக்கும், சென். ஜோன்ஸ் மாணவர் தலைவர்கள் கிரிக்கெட் கோஷ்டிக்குமிடையில் நடைபெற்ற கிரிக்கெட் போட்டியில், சென். ஜோன்ஸ் மாணவர் தலைவர்கள் கோஷ்டி வெற்றி பெற்றது.

மத்திய கல்லூரி தலைவர்கள் கோஷ்டியில் துடுப்பெடுத்தாடிய டி. புரட்சிதாசன் மிகவேகமாக 103 ஓட்டங்களைப் பெற்றது குறிப்பிடத்தக்கது.

இப் போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடிய சென். ஜோன்ஸ் தலைவர்கள் கோஷ்டி மொத்தம் 84 ஓட்டங்களைப் பெற்றது. எம். எஸ் எஸ். சிவக்குமார் 5 விக்கெட்டுகளையும், டி. புரட்சிதாசன் 4 விக்கெட்டுகளையும் வீழ்த்தினர்கள்.

மத்திய கல்லூரி தலைவர்கள் கோஷ்டி முதல் இன்னிங்ஸில் எல்லா விக்கெட்டுகளையும் இழந்து 131 ஓட்டங்களைப் பெற்றது. இதில் டி. புரட்சிதாசன் 103 ஓட்டங்களைப் பெற்ருர். சி. தயானதேவா 5 விக்கெட்டுகளை வீழ்த்தினர்.

சென். ஜோன்ஸ் தலைவர்கள் கோஷ்டி 2-வது இன்னிங்ஸில் மொத்தம் 163 ஓட்டங்களைப் பெற்றது. றேமன் 33 ஓட்டங்களைப் பெற்ருர். எம். எஸ். எஸ். சிவக்குமார் 6 விக்கெட்டுகளையும், ஜே. எல். மரியநாயகம் 2 விக்கெட்டுகளையும் வீழ்த்தினர்.

மத்திய கல்லூரி தலைவர்கள் கோஷ்டி 2-வது இன்னிங்ஸில் மொத்தம் 93 ஓட்டங்களைப் பெற்றது. இதிலும் டி. புரட்சிதாசன் 35 ஓட்டங்களைப் பெற்ருர். சிவக்குமார், அரசரத்தினம் முறையே 4, 4 விக்கெட்டுகளை வீழ்த்தினர்.

ஆட்டமுடிவில் சென். ஜோன்ஸ் மாணவர் தலைவர்கள் கோஷ்டி 23 அதிகப்படியான ஓட்டங்களால் வெற்றி பெற்றது.

இப் போட்டி யாழ். மத்திய கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது.

(தே. நி)

## பாடசாலையில் திருட்டு

கைதடி, ஞாயிறு

மட்டுவில் வடக்கு கமலாசினி தமிழ்வித்தியாலயத்தில் திருட்டுப் போய்விட்டதாக

## "ஒதுங்கி வாழ்வதற்கு ஆசிரியன் துறவியல்லன்"

பருத்தித்துறை, ஞாயிறு

"ஒருசிறந்த ஆசிரியர் ஒரு தடியுமின்றி பாடசாலையில் ஒழுங்கை நிலைநாட்டும் திறமை படைத்தவராயிருத்தல் வேண்டும். தடிமூலம் உருவாக்கப்படும் ஒழுங்கு நிரந்தரமற்றது ஆசிரியர் தமது சிறந்த உதாரண வாழ்க்கை மூலம் மாணவருக்குவழிகாட்டவேண்டும்"

இவ்வாறு நெல்லியடி மத்திய மகாவித்தியாலய உப அதிபர் திரு. அ. சிவலிங்கம் மேற்படி கல்லூரியிலிருந்து மாற்றலாகிச் சென்ற திரு. பி. எல். மனுவேற்பிள்ளை, செல்வி. சரோஜினி தாமோதரம்பிள்ளை ஆகியோருக்கு அளிக்கப்பட்ட பிரிவுபசார வைபவத்திற் பேசுகையில் குறிப்பிட்டார். திரு. ஏ. தாமோதரம்பிள்ளை தலைமையில் நடந்த இக்கூட்டத்தில் திரு சிவலிங்கம் மேலும் கூறியதாவது:

ஆசிரியனென்பவன் சமுதாயப் போராட்டங்கள், இன்ப துன்பங்களினின்றும் விடுபட்டு வாழும் ஒருதுறவியல்லன். சமுதாயத்தின் பிரிக்கமுடியாத ஓர் அங்கமாகிய ஆசிரியன் அப்போராட்டங்களிற் கலந்து தலைமை தாங்கவும் வேண்டும்.

பிரிந்து செல்லும் ஆசிரியருக்கு கல்லூரி ஆசிரியப் பேரவையால் பரிசில்களும் வழங்கப்பட்டன.

## இவ்வாண்டு அதிக மாணவர்கள் தெரிவு

பருத்தித்துறை, ஞாயிறு

பலாலி ஆசிரியர் பயிற்சிக் கலாசாலைக்கு இவ்வாண்டு வழக்கத்திலும் பார்க்கக் கூடுதலான மாணவர்தெரிவு செய்யப்பட்டுள்ளனர். விசேட ஆங்கிலப் பகுதிக்கு இவ்வாண்டு 75 பேர் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். கைவேலைப்பகுதிக்கு முதன்முதலாக இவ்வாண்டு 6 பெண்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். புதிதாக ஆரம்பிக்கப்பட்டுள்ள விவசாயத் துறைக்கு 10 பேர் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். இன்னும் சில நாட்களில் பயிற்சி பெற்ற விவசாயப் பட்டதாரிப் போதனுசிரியர் நியமிக்கப்படுவதாகத் தெரிகிறது. அடுத்தாண்டு தெரிவு செய்யப்படும் மாணவர் தொகை மேலும் அதிகரிக்கலாமென்று அறியக்கிடக்கிறது.

## பலாலிஆசிரிய மாணவர்களை விமானப்படை தோற்கடித்தது

பருத்தித்துறை, ஞாயிறு

பலாலி ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை உதைபந்தாட்டக் கோஷ்டிக்கும், இலங்கை ஆகாய விமானப்படைக் கோஷ்டிக்குமிடையே நடைபெற்ற மிகச்சுவையான உதைபந்தாட்டப் போட்டியில் விமானப்படைக் கோஷ்டி 3 1 கோல்களால் பலாலிக் கோஷ்டியை வென்றது. விமானப்படை ஒவ்வொரு தடவையும் கோல் போட்டதும், விளையாட்டிடத்திற்குமேலாக விமானங்கள் தாழப்பறந்து வட்டமிட்ட நிகழ்ச்சி குறிப்பிடத்தக்கது. பலாலிபயிற்சிக் கலாசாலை விளையாட்டரங்கில் நடைபெற்ற இவ்வாட்டத்திற்கு திரு. ஏ. ஜே. ஞானரத்தினம்மத்தியஸ்தம் வகித்தார்.

## கருத்தரங்கும்

## சந்தேகநபர்கள் றிமாண்டில்

வல்வெட்டித்துறை, ஞாயிறு

குடத்தனையைச் சேர்ந்த வ. ஆறுமுகம், த செல்லத்தம்பி, த, செச்லக்கிளி, கோ. கனகர், தளையசிங்கம், நா. சின்னப்பர் ஆகியோர் கடந்த மாசி மாதம் 16-ந் திகதி அதே இடத்தைச் சேர்ந்த சின்னக்குட்டி என்னும் வயோதிபப் பெண்ணைச் சுட்டுக் கொலை செய்ததாக பருத்தித்துறைப் பொலிசாரினல் சந்தேகத்தின் பேரில் கைதுசெய்யப்பட்டு றிமாண்டில் வைக்கப்பட்டுள்ளனர்.

## நூல் நிலையப் பொறுப்பாளராக நியமனம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




சிவாஜிகணேசன் பத்மினி

பாலையா

நாகேஷ்

நம்பியார்

ஏ.வி.எம். ராஜன்

மனோரமா

மற்றும்பலர் நடித்த



சிவாஜிகணேசன் அளிக்கும்

ஸ்ரீ விஜயலக்ஷ்மி பிக்சர்ஸ்

தில்லானா மோகனம்பாள்

ஈஸ்ட்மென் கலர்

திரைக்கதை, வசனம், டைரக்ஷன்

A. P. நாகராஜன்


சண்முகம்பிள்ளை, மேரி ஜோசெபின் மைக்கல, மல்லிகாதேவி இராசையா (வயலின்), வாசுகி சங்கரலிங்கம் அருந்ததி சங்கரலிங்கம், மகேசன் சபாநடேசர், புல்லாங்குழல், சாந்தினி வேலாயுதபிள்ளை வாய்ப்பாட்டு.

**திருக்கோணமலை**

சாதாரணபிரிவு-

வாய்ப்பாட்டு; உதயகுமாரி இராமநாதபிள்ளை, சுபாஷினி சித்திரவேலு, கமலினி சுப்பிரமணியம், உதயராணி சித்திரவேலு.

**மட்டக்களப்பு**

சதாரணபிரிவு ஸி:-

சுகந்தி இராமலிங்கம் வாய்ப்பாட்டு. ஜயந்தி இராமலிங்கம் வயலின், நகுலேஸ்வரி குழந்தைவேலு வாய்ப்பாட்டு, சாரதாதேவி கணபதிப்பிள்ளை வாய்ப்பாட்டு, மனோரஞ்சினி சிவ


இன்று மட்டும்

வெஸ்லி சினிமா

மானிப்பாய்

தினசரி: 6-30, 10-00

பிரிபோயா, போயா 2-30மணி

எஸ். எஸ். ஆர். - விஜயகுமாரி நடித்த

பூம்புகார்

(புதிய கொப்பி)


[ர]ஜினி இம்மானுவேலல், [தி]ரேசம்மா அற்புதம், ராமினி துரைசாமி வாய்ப்பாட்டு, கல்யாணி நடராசா வாய்ப்பாட்டு இந்திராணி மாரிமுத்து, ரஞ்சி[னி] சோமசுந்தரம், விஜய[ரா]ணி கனகசபை. (வயலின்) கமலாம்பிகை பாலசிங்கம், (வயலின்) ஞானேஸ்வரி குமாரசாமி. தங்கராணிவிஞசித்தம்பி, சகுந்தலா அண்ணுச்சாமிஐயர், சிவரஞ்சிதம் சிவசுந்தரம், தேவமஞ்சரி தம்பிப்பிள்ளை, பிரேமச்சந்திரன் சந்திரசேகரம், குணசீலன் ஞானப்பிரகாசம், கமலாம்பாள், திருச்செந்தூர், மனோரஞ்சிதா திருநாவுக்கரசு, ஜோய்ஸ், நைற் (வயலின்), தங்கம்மா தம்பிராசா, வசந்தகுமரரி நடராசா, மீனகுமாரி தில்லைராஜா, ஜலஜா மயிலானந்தன்.

**கோப்பாய்**

சாதாரணபிரிவு-ஸி

கோப்பாய்

சாஸ்திரப் பரீட்சையில் விசேஷ சித்தி சரஸ்வதி சுப்பிரமணியம் (வயலின்), பரமேஸ்வரி கனகரத்தினம் (வாய்ப்பாட்டு) வசந்தாதேவி தர்மலிங்கம் (வாய்ப்பாட்டு)

**தெல்லிப்பழை**

சாதாரணபிரிவு-ஸி

வாய்ப்பாட்டு

கிரிஜா பரநிருபசிங்கம், மாஜினி நடராசா, காந்திமதி மாணிக்கம், சத்தியநாதன் சிவானந்தராசா, ரஜந்தினி நடராசா, கௌரி


REGAL JAFFNA

Daily 4-45, 7 & 9-45 p.m

Sean Connery,

Tippi Hedren

in

MARNIE

(Adults only)



வெற்றிகாரமான 2வது வாரம்

MANOHARA

JAFFNA

Daily 4-45, 7 & 9-45 p.m

Poya, Prepoya 4 shows

HELGA

The most revealing Sex education Film ever released!

(Strictly for adults only)

கருவுற்பத்தி முதல் பிரசவம் வரையில் இதுவரை திரைக்கு அனுமதிக்கப்படாத பல சம்பவங்களை புதிய சாதனைக் கருவிமூலம் வெளிப்படுத்திக் காட்டும் பிரசவ சித்திரம்.

ஹெல்கா

(கட்டாயமாக வயது வந்தவர்களுக்கு மட்டும்)

பாஸ்கள்-சலுகைகள் ரத்து


போது வெளிப்படும் என்பதை அறிந்தவர் யார்?

வழமைமப்படி தன்னுடைய உத்தியோகக் கடமைகளை முடித்துக்கொண்டு வீட்டுக்குச் செல்கின்றவர் தான் செல்வி நா[கமு]த்து சரஸ்வதி. கடந்த 2-3-70 ல் யாழ்ப்பாணப் பட்டினத்திலுள்ள 'பரிஞு காமன்ற்' தொழிலகத்தில் வேலை பார்த்துவிட்டு தனது சொந்த இடமான நுணுவிலுக்கு பஸ்ஸில் திரும்பினுர் செல்வி சரஸ்வதி.

அவர் திரும்பியபோது பகலவன் மேல்வானில் புகுந்துவிட்டான். இருட்டின் எதேச்சாதிகாரம் எங்கும் கப்பியிருந்தது. பஸ் வண்டியை விட்டுச் செல்வி சரஸ்வதி இறங்கினுர். வீட்டுக்குச் செல்லும்வழியில் அவரது காலிலே ஏதோ முள் குத்தியது போன்றிருந்ததாகப் பின்னர் தெரிவித்தார். தாக்கமெதுவும் தெரியாமல் இவர் வீட்டுக்கு வந்தார். அங்கே முள்ளுக் குத்தவில்லை. முள்ளுக்குத்தியது போன்ற உணர்வுண்டாக்கியது கொடிய சர்ப்பத்தின் தீண்டல். இதை உணராத செல்வி வீட்டுக்குச் சென்ருர். விடவேகம் உடலிற் பரவியது வைத்தியர்கள் சிகிச்சையினுல் காப்பாற்ற முடியாத அவர் ஜீவன் பிரிந்தது.

4-3-70-ல் நடைபெற்ற அன்ஞரது ஈமச்சடங்கில் இன, மத, சாதிபேதமின்றி பெருந்திரளானேர் கலந்து கொண்டனர்.

## பாடசாலையில் திருட்டு

கைதடி, ஞாயிறு

மட்டுவில் வடக்கு கமலாசினி தமிழ்வித்தியாலயத்தில் திருட்டுப் போய்விட்டதாக மேற்படி வித்தியாலய அதிபர் சாவகச்சேரிப்பொலிசில் செய்துகொண்ட முறைப்பாட்டின் பேரில் பொலிஸ் அதிபர் திரு. கே. துரைசிங்கம் பாடசாலைக்குச் சென்று விசாரணை நடத்தினுர்.

## "புதிய அதிகாரியை நியமிக்கவும்"

அனலைதிவு, ஞாயிறு

அனலைதீவில் புதிதாக அமைக்கப்பட்டுள்ள ஆஸ்பத்திரிக்கு ஒரு புதிய வைத்திய அதிகாரியை நியமிக்குமாறும், இப்போது இங்கு கடமையாற்றும்அப்போதிக்கரியையும் மருந்துகலப்பவரையும் இடமாற்றவேண்டுமென்றும் சுகாதார அமைச்சரையும் தீவுப்பகுதி எம்பியையும் அனலைதீவு மக்கள் கேட்டுள்ளதாகத்தெரிகிறது.

## சிரமதானத்தில் இளைஞர்

பண்டத்தரிப்பு, ஞாயிறு

இளவாலை சென் ஜேம்ஸ் பங்கு இளைஞர்கள் பற்றைகள் நிறைந்திருந்த ஆலய வளவை சிரமதான முறையில் துப்புரவு செய்தனர் தொடர்ந்தும் போயா நாட்களில் சிரமதான வேலைகள் நடைபெறுமாம்.

கில் நடைபெற்ற இவ்வாட்டத்திற்கு திரு. ஏ. ஜே. ஞானரத்தினம்மத்தியஸ்தம் வகித்தார்.

## கருத்தரங்கும் மாநாடும்

யாழ்ப்பாணம், ஞாயிறு

வேலணை கலைமகள் சனசமூக நிலையஆதரவில் இன்று மாலை இலக்கியக் கருத்தரங்கும் மகாநாடும் நடைபெற இருக்கிறது. நிலைய மண்டபத்தில் நிகழ்ச்சிகள் இடம் பெறும். மகாநாட்டுக்கு சனசமூக நிலையங்களின்சமாசத்தலைவர் திரு. சி. இராசரத்தினம் தலைமைவகிப்பார். இலக்கியக் கருத்தரங்கிற்கு வேலணைகிராமசபைத் தலைவர் திரு. க. சதாசிவம் கலந்துகொள்வார்.

வடபகுதி ச. ச. நிலைய மேற்பார்வையாளர் திரு. வி. கிருஷ்ணசாமி, தலைமையாசிரியர் திரு. ஐ. பொன்னையா ஆகியோர் உரைநிகழ்த்துவர். (வேல. நி.)

## துணைஆயர் கலந்துகொண்டார்

பண்டத்தரிப்பு, ஞாயிறு

இலங்கையின் கல்வாரி என அழைக்கப்படும் ஹினதுமவில் நடைபெற்ற தமிழருக்கான திருநாள் வைபவங்களில் திருமலைத் துணை ஆயர் வண. பி. தியோகுப்பிள்ளை கலந்துகொண்டார். வண. ஹென்றி பொன்னையாவின் பிரசங்கமும் சிலுவைப் பாதை நிகழ்ச்சிகளும் இடம் பெற்றன.

பட்டு நிமாண்டில் வைக்கப் பட்டுள்ளனர்.

## நூல் நிலையப் பொறுப்பாளராக நியமனம்

சுழிபுரம், சனி

வட்டுக்கோட்டைத் தொகுதியிலுள்ள காரை நகர் இந்துக்கல்லூரியில் இயங்கிவரும் சிபவயா நூல் நிலையப் பொறுப்பாளராக பண்டத்தரிப்பைச் சேர்ந்த ஆசிரியர் திரு வ. மே. தங்கராசா நியமிக்கப்பட்டுள்ளார்.

## வியாகுலமாதா திருநாள்

பண்டத்தரிப்பு, ஞாயிறு

இளவாலை புனித அன்னம்மாள் ஆலயத்தில் வியாகுல மாதா திருநாள் இம்மாதம் 20-ம் திகதி கொண்டாடப் படவிருக்கிறது. வியாகுல மாதா சொரூபசுற்றுப் பிரகாரம், திருப்பாதை என்பனவும் இதனையிட்டு நடைபெறவிருக்கின்றன.

## கட்டளைக்குரவர் இடமாற்றம்

பண்டத்தரிப்பு, ஞாயிறு

குருநகர் சென். ஜேம்ஸ் ஆலய கட்டளைக்குரவர் வண. பெனட் கொன்ஸ்டன்டைன் மன்ஞர்ப் பகுதிக்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார். அவரது இடத்திற்கு உரும்பராய்கட்டளைக்குரவர் வண. சவரிமுத்து நியமிக்கப்பட்டுள்ளார்.


இரண்டுலட்சத்து பத்து ஆயிரம் ரூபாவிற்கு மேல் வசூலைத் தந்து

75வது தினமாக வெற்றிமுரசு கொட்டி ஓடிக்கொண்டிருக்கிறது

இன்னும் சில தினங்கள் மாத்திரம் காண்பிக்கப்படும்

ஏமாற்றத்தைத் தவிர்க்க இன்றே பார்த்து மகிழுங்கள்

ராணி - யாழ்ப்பாணம்

தினசரி 2-30, 6-30, 9-30 போயா, பிறி-போயா 10-30

எம். ஜி. ஆர். — ஜெயலலிதா

அசோகன், சோ, சந்திரபாபு, பேபி ராணி

இன்னும் பலர் நடித்த

புரட்சி நடிகர் எம். ஜி. ஆரின்

வெற்றித் தயாரிப்பான

அடிமைப்பெண்

(ஈஸ்ட்மென் கலர்)

விரைவில் எதிர்பாருங்கள் திருடன்



'ஈழநாடு' காரியாலயத்தில்

விற்பனைக்குள்ள புத்தகங்கள்

| | புத்தகங்கள் [ஆங்கில மொழியில்] | ஆக்கியோன் | விலை |
|---|---|---|---|
| 1. | முதலாவது உலக தமிழ் மகாநாட்டில் சமர்ப்பிக்கப்பட்ட ஆராய்ச்சிக்கட்டுரைத்தொகுதிகள் I & II— | மகாநாட்டில் கலந்துகொண்ட புகழ்பெற்ற பேர் அறிஞர்கள் | ரூபா 250/- |
| 2. | தற்கால தமிழ் இலக்கியத்தில் பெண் — | ஸ்ரீமதி லோகநாயகி நன்னித்தம்பி | ரூபா 12/- |
| 3. | மகாபலிபுரம் பற்றி விளக்கப்படங்களோடு கூடிய நூற்பட்டியல் — | William Willetts | ரூபா 5/- |
| 4. | திராவிடமொழிகள் பற்றிய விபரங்கள்அடங்கிய நூற்பட்டியல் — | M. Andronov | ரூபா 5/- |
| 5. | தூரதேசங்களில் தமிழ் படிப்பு — | | ரூபா 15/- |
| | ,, ,, ,, — | (கலிகோ பைன்டிங்) | ரூபா 21/- |
| 6. | மகாத்மாகாந்தி வெள்ளேடு(Album படங்களுடன்)— | ராஜேந்திரபிரசாத் முன்னுரையுடன் | ரூபா 10/- |
| 7. | மகாத்மா காந்தியின் செய்திகள் — | மோகன்ராவ் | ரூபா 1/50 |
| 8. | சிறுவர்கள் ராமாயணம் — | M. பூதலிங்கம் | ரூபா 2/- |
| 9. | காந்தி கதை (வண்ணப்படங்களுடன்) — | | ரூபா 2/50 |

கையிருப்பில் சொற்ப பிரதிகளே உள்ளன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யு தாண்ட் அழைப்பின்பேரில்

# டாக்டர் ஜாரிங் அவசரமாக நியுயோர்க் வருகிருர்

## மேற்காஸிய அமைதிக்கு மீண்டும் முயற்சி

நியுயோர்க், மார்ச் 8

மேற்காசிய நிலைமைகள் குறித்து ஆலோசிப்பதற்காக டாக்டர் குணர் ஜாரிங்கை ஐ நா, பொதுச் செயலாளர் யுதாண்ட் அவசரமாக நியுயோர்க்கிற்கு அழைத்திருக்கிருர்.

டாக்டர் குணர் ஜாரிங் செவ்வாயன்று நியுயோர்க் வந்து சேருவாரென்று எதிர்பார்க்கப்படுகின்றது.

ரஷ்யாவில் சுவீடிஷ் தூதுவராக விருந்துவந்த டாக்டர் குணர் ஜாரிங் ஐ. நா. பொதுச் செயலாளரின் விசேஷ பிரதிநிதியாக மேற்காசியாவில் அமைதியை ஏற்படுத்தும்முயற்சியில் ஈடுபடுவதற்கு முன்னர் பணிக்கப்பட்டிருந்தார். டாக்டர் குணர் ஜாரிங் மேற்காசிய நெருக்கடியில் சம்பந்தப்பட்ட எல்லா அரபுநாடுகளுக்கும் இஸ்ரேலுக்கும் விஜயம்செய்து அந்த நாட்டுத் தலைவர்களை சந்தித்துப் பேசினுர். என்ருலும் அமைதி ஏற்படுவதற்கான முயற்சிகள் எதுவும் பலனளிக்காதுபோகவே அவர் மனமுடைந்து தமதுமுயற்சிகளைக் கைவிட்டுவிட்டு தாயகம் திரும்பிவிட்டார்.

சமீபத்தில் ஐ. நா. பொதுச் செயலாளர் யுதாண்ட் ஜெனிவாவுக்கு போய் அங்கு டாக்டர் ஜாரிங்கை கண்டு பேசிவிட்டுத் திரும்பினுர். இப்பொழுது டாக்டர் ஜாரிங்கை அவசரமாக நியுயோர்க் வரும்படி யுதாண்ட் அழைப்பு விடுத்திருப்பது மேற்காசிய நெருக்கடியில் புதிய திருப்பம் ஏற்படப்போவதைக் காட்டுவதாக அவதானிகள் கூறுகிருர்கள். மேற்காசிய நெருக்கடி சம்பந்தமாக வல்லரசு நாடுகளின் பிரதிநிதிகள் நடத்திவரும் பேச்சுக்களில் யுதாண்டிற்கு நம்பிக்கை ஏற்பட்டிருப்பதாகக் கருதப்படுகின்றது. இதன் பேரிலேயே அவர் டாக்டர் ஜாரிங்கை அவசரமாக அழைத்திருப்பதாகவும் கூறப்படுகின்றது.

டாக்டர் ஜாரிங் யுதாண்டுடனும், வல்லரசுப் பிரதிநிதிகளுடனும் ஆலோசனைகள் நடத்தியபின்னர் மேற்காசியாவுக்குச் சென்று தாம் விட்டுச் சென்ற பணியைத் தொடர்வதுபற்றி முடிவுசெய்வார்.

### லெபனுன் எல்லையில் குமுறல்

லெபனுன் எல்லையில் இஸ்ரேல் மீண்டும் தாக்குதல் ஒன்றை நடத்தியிருக்கின்றது. இதில் ஒரு லெபனுன் சிப்பாய் கொல்லப்பட்டிருக்கிருர்.

எல்லைச் சம்பவங்கள் குறித்து பொறுமையைக் கடைப்பிடிக்கும்படி இஸ்ரேலையும் லெபனுனையும் அமெரிக்கா கேட்டிருக்கின்றது.

லெபனுன் எல்லைகளில் அரபுக் கொமாண்டோக்கள் இருந்துகொண்டு இஸ்ரேல் மீது தாக்குதல் நடத்துவதைக் கட்டுப்படுத்தாவிட்டால் லெபனுன் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்போவதாக இஸ்ரேல் எச்சரிக்கை விடுத்துள்ளது. எனவேதான் இருநாடுகளையும் அவதானமாக நடந்துகொள்ளும்படி அமெரிக்கா கேட்டிருக்கின்றது.

---

## தாக்குதல் மூவர் கொலை

கல்கத்தா, மார்ச். 8

மேற்கு வங்காளத்தில் நக்ஸல்பாரி கலகக் காரர்களுக்கும் மற்றவர்களுக்குமிடையில் நடைபெற்ற ஒரு கைகலப்பில் மூன்று பேர் கொல்லப்பட்டனர். ஆறுபேர் காயமடைந்தனர். இவர்களில் ஒருவர் பொலிஸ் அதிகாரி. ஆறு நக்ஸல் பாரிகள் ஆயுதங்களுடன் போரிட்டதாகக் கூறப் படுகின்றது.

## புற்றுநோயை குணமாக்கும் மூலிகை

புதுடில்லி, மார்ச் 8

புற்று நாயைக் குணப்படுத்துவதற்கு தேவையான வீரிய சக்திகள் கொண்ட ஒரு கூட்டு மூலிகையை உத்தர பிரதேசத்தில் தோட்டக்கலை நிபுணர் ஒருவர் கண்டு பிடித்திருக்கிருர். இந்த மூலிகையின் சக்திகளை ஆராய்ந்து மருந்து கண்டுபிடிப்பதில் வெளிநாட்டு நிறுவனம் ஒன்று ஈடுபடவிருப்பதாகத் தெரிகின்றது.

## யு.எஸ் கைதிகள்

நியுயோர்க், மார்ச். 8

வடவியட்னுமினுல் சிறைப்பிடிக்கப்பட்டுள்ள அமெரிக்க சிப்பாய்களின் மூன்று பேர்களின் பெயர்கள் வெளியிடப் பட்டுள்ளன.

வடவியட்னும் கைது செய்து வைத்திருக்கும் அமெரிக்க கைதிகள் அனைவரது பெயர்களையும் வெளியிடும்படி அமெரிக்க அரசாங்கம் கேட்டுவருகின்றது.

---

## சிறுமியை கடத்தியவருக்கு தூக்குத்தண்டனை

கராச்சி, மார்ச் 8

ஆறு வயது சிறுமியொருவரைக் கடத்தியக் குற்றத்துக்காக பாகிஸ்தானி ஒருவர் தூக்கிடப் ப[illegible]ருக்கிருர்.

# முழுச் சூரியகிரகணம்

## அமெரிக்காவில் தெரிந்தது

நியுயோர்க். மார்ச். 8

அமெரிக்கா, மெக்ஸிக்கோ கனடா ஆகிய நாடுகளில் நேற்று தெரிந்த பூரணசூரிய

கிடைத்திருக்குமென்று கருதப்படுகின்றது.

பட்டப்பகலில் முழுசூரிய கிரகணம் ஏற்பட்டதனுல்

## செவ்வாயில் மனிதன் இறங்குவான்

நியுயோர்க், மார்ச் 8

அமெரிக்காவின் அடுத்த பத்தாண்டுகாலத்துக்கான விண்வெளி ஆராய்ச்சித் திட்டங்களை அதிபர் நிக்ஸன் வெளியிட்டிருக்கிருர்.

பரந்தவெளியில் காணப்படும் பல்வேறு கிரகங்களுக்கும் அடுத்தபத்தாண்டுகளிலும் அமெரிக்கா ஆளில்லா கிரகங்களை அனுப்ப சோதனைகள் நடத்தும் இறுதியில் செவ்வாய்க் கிரகத்தில் மனிதன்போய் இறங்குவதற்கான திட்டம் செயல்படுத்தப்படும்: செவ்வாய்க் கிரகத்தில் மனிதனை இறக்குவதே அடுத்த பத்தாண்டு திட்டத்தின் இறுதி குறிகோளாகவிருக்கும்.

......

## யுவதி தற்கொலை

மண்டைதீவு, ஞாயிறு

மண்கும்பான் வாசியான வி. சுப்பிரமணியம் என்பவரின் மகள் கமலாதேவி 17 வயது யுவதி நச்சுத்திராவகம் அருந்தித் தற்கொலை செய்துகொண்டார். பெற்ருேருடன் ஏற்பட்ட மனஸ்தாபமே இதற்குக்காரணமாம்.

இறந்த யுவதியின் தந்தை சாட்சியமளிக்கையில், இறந்தவர் தமது மூத்த பிள்ளையென்றும், அவர் வவனியாவிலிருக்கும் உறவினர் ஒருவரின் வீட்டிற்குச் செல்ல அனுமதி கேட்டதற்கு தாம் மறுத்ததாகவும், அதனுல் மனமுடைந்த அவர் நச்சுத்திராவகம் அருந்தித் தற்கொலை புரிந்துகொண்டார் எனவும் குறிப்பிட்டார்.

விசாரணை நடத்திய திடீர் மரணவிசாரணை அதிகாரி திரு. அ. வல்லிபுரநாதன் தற்கொலை எனத் தீர்ப்பளித்தார்.

... ...

## காங்கிரஸ் வேட்பாளர் இவ்வாரம் தெரியும்

யாழ்ப்பாணம், திங்கள்

இலங்கைத் தமிழ்க் [illegible]ங்கி

# ஸ்மித் ஆட்சி நீடிப்பதற்கு பிரிட்டனே காரணம்

## 38 ஆபிரிக்க நாடுகள் குற்றச்சாட்டு

நியூயோர்க், மார்ச் 8

ரொடீஷியா தன்னை குடியரசாகப் பிரகடனப் படுத்திக் கொண்டிருப்பது குறித்து விவாதிப்பதற்கு அவசரமாக ஐ நா. பாதுகாப்பு சபை கூடவேண்டுமென்று 38 ஆபிரிக்கநாடுகள் வற்புறுத்தியுள்ளன.

இந்த நாடுகள் ஐ. நா. வட்டாரங்களுக்கு விடுத்துள்ள சுற்றுநிருபம் ஒன்றில் ரொடீஷியா மீது பிரிட்டன் நடவடிக்கை எடுக்கத்தவறியதின் காரணமாகவே அயன் ஸ்மித்தின் சட்ட விரோத ஆட்சி நீடித்துவருகின்றது என்று குற்றஞ் சாட்டியுள்ளன.

### ரஷ்யா குற்றச்சாட்டு

ஸ்மித் ஆட்சியை உருவாக்கிவாழ வைத்து வருவதாக பிரிட்டன் மீது சோவியத் யூனியன் குற்றஞ்சாட்டியிருக்கின்றது

'டாஸ்' வெளியிட்டுள்ள ஓர் அறிக்கையில் ரொடீஷியக்குடியரசை சோவியத் யூனியன் அங்கீகரிக்கவில்லையென்றும், ரொடீஷியாவிலுள்ள ஆபிரிக்க மக்களுக்கு சோவியத் யூனியன் தனது பூழு ஆதரவையும் கொடுக்கும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஐ நா. வின் அரசியல் கமிட்டி ரொடீஷியா பற்றி ஆலோசிப்பதற்கு திங்களன்று கூடவிருக்கின்றது.

# 'நாவலரின் மனேதிடத்துடன் இளைஞர் புறப்படவேண்டும்'

## தீவுப்பகுதி எம்.பி. அழைப்பு

ஊரதீவு, ஞாயிறு

''அந்நியர் ஆட்சியில் நடைபெற்றதைப் போன்ற ஒரு நிலை இன்றைய தமிழ்ச் சமூகத்திற்கு மீண்டும் வந்திருக்கிறது. எம் மத்தியில் இருக்கும் தாழ்த்தப்பட்ட மக்களை அற்ப சலுகைகளைக் காட்டி அரசாங்கம் மதமாற்றம் செய்ய முனைகின்றது. குறிப்பிடத்தக்க அளவு மக்கள் பௌத்தர்களாகமாறிக்கொண்டிருக்கிருர்கள். இதை நாம் தடுத்து நிறுத்த முன்வராவிட்டால் காலகதியில் சைவசமயமே அழிந்துவிடக்கூடிய வெட்கக்கேடான நிலை ஏற்படும். இதைதடுத்து நிறுத்த உழைப்பதற்காக தம்மை அர்ப்பணிக்கத்தக்க இளைஞர்கள் ஆறுமுகநாவலரின் மனோதிடத்துடன் இலங்கையின் சந்துபொந்துகளில் இருந்தெல்லாம் புறப்பட்டுவர வேண்டும். அப்போதுதான் தமிழையும் சைவத்தையும் ஒருங்கே காப்பாற்ற முடியும்''.

தீவுப்பகுதி ஆட்சிமன்ற உறுப்பினரும் தமிழர்சுயாட்சிக் கழகத் தலைவருமான திரு வ. நவரத்தினம், ஊரதீவு இழந்தமிழர் மன்றத்தினர் நடத்திய நான்காவது கலைவிழாவில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு உரையாற்றுகையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

வழக்கறிஞர் ப. கதிரவேலு திரு. நாவேந்தன், புலவர் ஈழத்துச் சிவானந்தன், கவிஞர் நல்லையூரன், மகேஸ்வரன், சு. வில்வரத்தினம், க கிருபானந்தன், அ. பரமானந்தன், ந. பிரபாகரன் ஆகியோர் உட்படப் பலர் இவ்விழாவில் உரையாற்றினர்

மன்றத் துணைச் செயலாளர் திரு. பொ. வைத்திலிங்கம் நன்றியுரைகூறினுர்.

திருப்பூங்குடி எஸ். என். இராஜன் குழுவினரின் வில்லிசையும், ஊரதீவு திருவள்ளுவர் பாலர் கழகத்தினரின் 'சோதனையும் வேதனையும்' என்னும் நாடகமும், ஊரதீவு இளந்தமிழர் மன்றத்தினரின் 'பாமா கல்யாணம்' என்னும் நாடகமும். இரத்தினம் இரட்டையர் குழுவினரின் இன்னிசைக் கச்சேரியும் விழாவில் இடம்பெற்றன.

# செய்திச் சுருக்கம்

### வாஷிங்டன் சென்றுள்ளனர்

மகாவலிகங்கையை திசை திருப்பும் வேலைக்கான டென்டர் வழங்குவது சம்பந்தமாக உலக வங்கியின் நீர்ப்பாசனத் திட்டப் பகுதியினருடன் பேச்சுவார்ததை நடாத்த நீர்ப்பாசன இயக்குனர் திரு வி. என் இராஜரத்தினமும், காணி நீர்ப்பாசன அமைச்சின் சிரேஷ்ட உதவிக் காரியதரிசி திரு. ரி. சிவஞானமும்

கொண்டிருக்கும்போது சுழியினுல் இழுத்துச்செல்லப்பட்டு நடு ஆற்றில் மூழ்கி மரணமாயினர்

### உருக்குக்கம்பி வீசப்பட்டது

கண்டியிலுள்ள இலங்கை வங்கிக் கிளையின் அலுவலகத்தின் இரு பெரிய ஜன்னல்கள்மீது உருக்குக்கம்பித் துண்டொன்று வீசப்பட்டதன் விளைவாக ஐயாயிரம் ரூபாவுக்கு மேல் சேதமேற்பட்டுள்ளதென மதிப்பிடப்பட்டுள்ளது.

யு. எஸ். அதிகாரிக்காக

# இரு தீவிரவாதிகள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அமெரிக்காவில் தெரிந்தது

நியுயோர்க், மார்ச் 8 அமெரிக்கா, மெக்ஸிக்கோ கனடா ஆகிய நாடுகளில் நேற்று தெரிந்த பூரண சூரிய கிரகணத்தை லட்சக்கணக்கான மக்கள் பார்த்து மகிழ்ந்தார்கள். 14 நாடுகளிலுமிருந்து வந்த ஆயிரக்கணக்கான விஞ்ஞானிகள் இந்த சூரியகிரகணத்தை மிகக்கவனமாக ஆராய்ந்தார்கள். பூமிக்கும் சூரியனுக்குமிடையில் சந்திரன் வந்ததன் மூலம் ஏற்பட்ட இந்த முழு சூரிய கிரகணம்மூலம் சூரியனைப்பற்றியும், அதன் சுற்று சூழ்நிலைகள் பற்றியும் விஞ்ஞானிகளுக்கு நிறையதகவல் கிடைத்திருக்குமென்று கருதப்படுகின்றது.

பட்டப்பகலில் முழுசூரிய கிரகணம் ஏற்பட்டதனால் மூன்று நிமிடங்கள் இருள் சூழ்ந்து கொண்டிருந்ததாகவும் இச்சமயத்தில் வானத்தில் வெள்ளி முளைத்ததாகவும் கூறப்பட்டது.

இந்த முழுசூரியகிரகணம் தொலைக்காட்சிகள் மூலம் பலநாடுகளுக்கும் காட்டப்பட்டது. விண்வெளியில் சுழன்று கொண்டிருக்கும் செயற்கைகிரகங்கள் சூரிய கிரகணத்தை பூமிக்கு அனுப்பி தொலைக்காட்சிகளில் பிரதிபலிக்கச்செய்தன.

பு. எஸ். அதிகாரிக்காக

## இரு தீவிரவாதிகள் விடுதலை

கௌதமாலாசிட்டிமார்ச்8 கௌதமாலா அரசாங்கம் சிறைவைத்திருக்கும் நான்கு தீவிரவாதிகளில் இருவரை விடுதலை செய்திருக்கின்றது.

தீவிரவாதிகள் கடத்திச் சென்றிருக்கும் அமெரிக்க தூதரகத்தின் தொடர்பு அதிகாரியை விடுதலை செய்வதற்குத் தங்களைச் சேர்ந்தவர்கள் விடுவிக்கப்படவேண்டும் என்று அவர்கள் நிபந்தனை விதித்திருந்தனர். இவர்கள் விடுதலை செய்யப்படாவிட்டால் அமெரிக்க ராஜதந்திரி கொல்லப்படுவார் என்றும் அவர்கள் பயமுறுத்தியிருந்தனர்

இப்பொழுது தீவிரவாதிகளில் இருவர் விடுதலை செய்யப்பட்டிருப்பதால் அமெரிக்க ராஜதந்திரி விடுதலை செய்யப்படுவாரா என்பது தெரியவில்லை

# ‘உரிமைகளைப்பெறவும் சோஷலிஸம் பெறவும் சமஷ்டி அமைப்புவேண்டும்’

### — திரு. அமிர்தலிங்கம்

மல்லாகம், ஞாயிறு

''சுதந்திரம் கிடைத்தபின் தமிழ் இனத்தவர் தமது பாரம்பரியங்களை இழந்து, தனித்து வலியிழந்து சந்தேகப் பிரஜைகளாக பிரதேசங்களைப் பறிகொடுத்து வாழவேண்டிய நிலைக்குள்ளாகிஇருக்கின்றனர். இலங்கையின் சகல பிரச்னைகளுக்கும் நிரந்தர தீர்வுகண்டு தமிழ்மக்கள் தமது இழந்த உரிமைகளைப் பெற்றுக் கொள்ள இந்தநாட்டில் சமஷ்டி அரசியல் அமைப்பை ஏற்படுத்தவேண்டும். இதனுல்தான் உண்மையான சமத்துவம், சகோதரத்துவம், சோஷலிசம் நம்மிடையே நிலவமுடியும். சமஷ்டி ஆட்சிக்கு உட்பட்ட தமிழரசை நிறுவவே நாம் விரும்புகிறோம்.''

சுன்னுகம் பட்டினசபை ஆய்வுக்குழுவில் தமிழ் மக்களின் ‘இன்றைய நிலையும் எதிர்காலமும்’ என்ற பொருள்பற்றி சனிக்கிழமை வட்டுக்கோட்டை எம். பி. திரு. அ. அமிர்தலிங்கம் பேசுகையில் மேற்கண்டவாறு தெரிவித்தார். உடுவில் எம். பி. திரு. வி. தர்மலிங்கம் தலைமை வகித்தார்

### பிரதிநிதித்துவம் குறைந்தது

திரு. அமிர்தலிங்கம் மேலும் பேசியதாவது:-

ஐரோப்பியர். ஆங்கிலேயர் நமது நாட்டை ஆட்சி புரியமுன்னர் தமிழ் மக்கள் இலங்கையில் அரசாளும் இனமாக இருந்துள்ளனர். ஆங்கிலேயர் நமது நாட்டினை பிரிட்டிஷ் நாட்டு அரசியல்அமைப்பு முறையில் ஆண்டனரே தவிர நமது சொந்தநாட்டிற்கு உகந்த முறையில் அரசியல் அமைப்பை ஏற்படுத்தவில்லை. சுதந்திரம் கிடைத்தபின் சிங்களமக்கள் ஆட்சி புரியும் இனத்தவராகவும் தமிழர் ஆளப்படுபவர்களாகவும் மாற்றம்பெற்றனர், 1948ம் ஆண்டில் ஏற்பட்ட அரசியல் அமைப்பின் பலன் இதுவாக இருந்தது. தமிழ்மக்களுக்கு ஜனத்தொகைக்கு ஏற்ற பிரதிநிதித்துவம் இன்று இல்லை. 1948-ல் 95 ஸ்தானங்களில் 21 ஸ்தானங்கள் தமிழ் ஆட்சிமன்றஉறுப்பினர்களாக விளங்கினர் தற்போது 151 தொகுதிகளில் 18 தொகுதிகளில் மட்டும் தமிழ்மக்களின்பிரதிநிதிகள் இருக்கின்றனர். நாட்டின் 69 வீத சிங்கள மக்களுக்கு 80 ஸ்தானங்கள்இருக்கின்றன. உலக நாடுகளில் சிறுபான்மை இனத்தவர்களுக்கே கூடிய பிரதிநிதித்துவம் வழங்கப்பட்டுள்ளது. ஆனுல் நமது நாட்டில் பாராளுமன்ற ஜனநாயகம் என்ற கேலிக்கூத்தில்பெரும்பான்மை இனத்தவர் கூடிய பிரதிநிதித்துவம் வகிக்கின்றனர்.

மலைநாட்டிலிருந்து 8 தொகுதிகளில் தமிழர் பிரதிநிதிகளாகஇருந்ததை பிரஜா உரிமைச்சட்டமூலம் ஒருவர் கூட இல்லாதுஅழித்துவிட்டனர். இதன்பின் நாடற்றவர் என்ற நிலைக்கு மலைநாட்டுத் தமிழர் தள்ளப்பட்டனர்.

1948க்கு பின் சிங்களக்குடியேற்றம் கிழக்குமாகாணத்தில் கல்லோயாப்பகுதியிலும் 1956க்கு பின் அம்பாறை, அல்லை, பதவியா போன்ற இடங்களிலும் திட்டமிட்டுச் செய்யப்பட்டன. சிங்களககுடியேற்றத்திஞல் திருமலைமாவட்டத்திலிருந்து நிச்சயம் சிங்களவர் பாராளுமன்றம்செல்லக்கூடிய நிலைஏற்படப்போகின்றது. தமிழ்ப்பகுதி பாராளுமன்றப் பிரதிநிதிகள் தொகை இதஞல் மேலும் குறையலாம்.

### இனமாற்ற முயற்சி

தமிழருக்கு எனத்தனியான பிரதேசம் இல்லாவிடில் தேசிய இனமாக உரிமை பெற்றவர்களாக நாம் வாழமுடியாது. தமிழ் மக்களை அழிக்க இப்போது பல உருவங்களில் வேகமாக காரியங்கள் நடைபெறுகின்றன. போதனுமொழி, தமிழ்ப்பகுதிகளில்பௌத்த-சிங்கள பாடசாலைகள் அமைத்தல்மூலம் எமது இனத்தை மாற்ற நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. தமிழர் தொடர்ந்தும் இந்த நாட்டில் தமிழ் இனமாக வாழ இவற்றை எதிர்த்துப் போராடவேண்டும்.

### பிரிவினை நல்லதல்ல

நாடு பிளவுபடுவது சிங்கள-தமிழ்மக்களுக்கு உகந்ததல்ல. சமஷ்டிக் கோரிக்கை பிரிவினையை ஏற்படுத்தக் கூடியதல்ல. இலங்கையின் சகல இனத்தவரிடையேயும் சமஷ்டிமூலம் ஒற்றுமையை ஏற்படுத்த விரும்புகின்ரேம். வடக்கு கிழக்கு மக்களுக்கு பிரிவினை ஆட்சி நன்மைதரக்கூடியதல்ல. இதஞல் எமக்கு பொருளாதார ரீதியில் சிக்கல்கள் ஏற்படும். நைஜீரியா, கொங்கோ போன்ற தேசங்களில் நிகழ்ந்த பிரிவினைப்போராட்டங்கள் நமக்கு நல்ல படிப்பினையாக விளங்குகின்றன. செக்கோஸ்லேவியா போன்ற நாடுகளில் இடம்பெற்ற அரசியல் அமைப்பு மாற்றம் போன்று நமது நாட்டிலும் சமஷ்டி அமைப்பு தோன்றவேண்டும். ஏகாதிபத்திய சின்னமான கச்சேரிமுறைகள்ஒழிக்கப்பட்டு மக்களால் தெரியப்படும் பிரதிநிதிகள் மூலம் மாவட்ட ரீதியில் ஆட்சிநிர்வாகம் இடம்பெறவேண்டும். பின்னர் இவை நாளடைவில் சமஷ்டியை ஏற்படுத்தும். சிங்களமக்கள் மத்தியிலும் கூட சமஷ்டி அமைப்புமுறைக்கு ஆதரவு இருக்கின்றது. அரசியல் அமைப்பு மாற்றக்குழுமுன் கண்டியிலிருந்து நான்கு மகஜர்கள் சமஷ்டிக் கோரிக்கையைக்கோரி அனுப்பப்பட்டிருந்தன. நமது நாட்டின் பிரச்னைகள்தீர சமஷ்டி முறையை உருவாக்குதல் அவசியம்.

### காங்கிரஸ் வேட்பாளர் இவ்வாரம் தெரியும்

யாழ்ப்பாணம், திங்கள்

இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் கட்சி சார்பில் பொதுத் தேர்தலில்போட்டியிடவிருக்கும் அபேட்சகர்களின் பட்டியல் இவ்வார இறுதியில் வெளியிடப்பட விருக்கிறது. காங்கிரஸ் கட்சித் தலைவரும் யாழ்ப்பாணம் எம். பி யுமான திரு ஜீ. ஜீ. பொன்னம்பலம் அபேட்சகர்தெரிவு நியமனக் குழுவுடன் பரிசிலனைசெய்வதற்காக இன்று யாழ்ப்பாணம் வருகின்ருர்.

......

### ஜே. பி. நியமிக்க நடவடிக்கை

சுழிபுரம், ஞாயிறு

மாதகல் மேற்கு சனசமூக நிலையத்தினர் தமதுபகுதிக்கு ஒரு புதிய சமாதான நீதவானை நியமிப்பதில் நடவடிக்கை மேற் கொண்டுள்ளனர். நிலைய அங்கத்தவரின் ஆலோசனை கோரும் ஓர் கடிதத்தைகாங்கேசன்துறை தொகுதி ஆட்சிமன்ற உறுப்னர். எஸ் ஜே. வி செல்வநாயகம் மேற்படி நிலையத்தவருக்கு அனுப்பி வைத்துள்ளார்.

### இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம்

### திங்கள் 9—3—70

(செய்திகள்: காலை 6-45, பகல் 12-45, மாலை 6-00, இரவு 9-00)

344 மீ. அன்ட் 61 மீ.

காலை 6-15 நாதாஞ்சலி, 6-25 சைவ நற்சிந்தனை, 6-30 கத்தோலிக்கநற்சிந்தனை, 6-35 துதிப்பாடல்கள், 7-15 மெல்லிசை, 8-00 செய்திச் சுருக்கம்,

344 மீ. அன்ட் 49 மீ.

பகல் 12-00 செய்திச் சுருக்கம், 12-03 சித்திரகானம், 1-00 மாதர் கேட்டவை 1-30 செய்திச்சுருக்கம்

344 மீ. அன்ட் 61 மீ.

மாலை 4-25 செய்திச் சுருக்கம், 4-28 கல்வி ஒலிபரப்பு, 5-00 செய்திச்சுருக்கம், 5-03 பிறந்ததின வாழ்த்துக்கள் 5-30 இளைஞர் உலகம்.

இரவு 6-10 மெல்லிசை, 6-15 பாமாலை, 6-30 கிராம சஞ்சிகை, 7-00 செய்திச் சுருக்கம், 7-03 வீணை, 7-45 விளையாட்டு, 8-00 செய்திச் சுருக்கம், 8-03 முஸ்லிம் நிகழ்ச்சி, 9-30 கலைக்கோலம் 10-00 நீங்கள் கேட்டவை, 10 30 செய்திச்சுருக்கம்.

திரு வ. நவரத்தினம், ஊர தீவு இழந்தமிழர் மன்றத்தினர் நடத்திய நான்காவது கலைவிழாவில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு உரையாற்றுகையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

மன்றக் காப்பாளர் திரு சு. பாலசிங்கம் தலைமையில் நடைபெற்ற இவ்விழாவை புங்குடுதீவு கிராமசபை உறுப்பினர் திரு செ. சோமசுந்தரம் குத்துவிளக்கேற்றி ஆரம்பித்து வைத்தார். முன்னைநாள் அரசாங்க அதிபர் திரு அ. இரத்தினம் மன்றக் கொடியை ஏற்றி வைத்தார்.

மன்ற அலுவலகமான அறிவகத்தில் திருவள்ளுவர் உருவப்படமொன்றையும் திரு வ. நவரத்தினம் எம் பி திறந்து வைத்தார் இவ்விழாவுக்கு முன்னர் புங்குடுதீவு மடத்துவெளிப் பிள்ளையார் கோயிலிலிருந்து திருவள்ளுவர் உருவப்படம் ஊர்வலமாக எடுத்து வரப்பட்டது. ஊர்வலத்துக்கு மன்றத் தலைவர் திரு பொன்னைவேந்தன் தலைமை வகித்தார்.

இவ் விழாவில் திரு வ. நவரத்தினம் தொடர்ந்து பேசியதாவது:

திருவள்ளுவருக்கு விழா எடுப்பதிஞலோ திருக்குறள் மன்றங்கள் அமைப்பதிஞலோ நாம் திருவள்ளுவரைப் பின்பற்றுவதாகக் கருதக்கூடாது. திருவள்ளுவரைப் பின்பற்றுவதாகக் கூறுகின்றவர்கள், பொய்யையும், புரட்டுக்களையும் சமுதாயத்தில் விதைத்து வருவதை நான் காண்கிறேன். இந்த கேவலமான நிலைமாறவேண்டும். இல்லறவாழ்விலே ஈடுபட்டிருப்பவர்கள் தொடக்கம் அரசியல்வாதிகள்வரை அனைவரும் வள்ளுவரின் கருத்தைப் பின்பற்றவேண்டும். இன்றைய இளைஞர்கள் குறிப்பாகத் தமிழினம் அவசியம் வள்ளுவரின் கருத்தைப் பின்பற்ற வேண்டும். ‘மயிர்நீப்பின் வாழாக் கவரிமா அன்னார் உயிர் நீப்பர் மானம்வரின்’

என்று வள்ளுவர் சொல்லியிருக்கிருர். மானத்தின் மாண்பை, அவசியத்தை எடுத்துணர்த்திய வள்ளுவரின் வழிவந்த இலங்கைத் தமிழினம் மானமற்ற நிலையிலே இன்று வாழ்கிறது. அடுத்தடுத்து எமக்கு அநீதி இழைக்கப்பட்டு நமது மானத்திற்குச் சவால்விடப்பட்ட போதெல்லாம் நாம் பொங்கியெழாது, பொறுத்திருந்தோம் இனியாவது நமது மானத்தை நிலைநாட்டப்போராடவேண்டும்.

வேலணை கிராம சபைத் தலைவர் திரு. க. சதாசிவம்,

தியினருடன் பேச்சுவார்த்தை நடாத்த நீர்ப்பாசன இயக்குனர் திரு வி. என் இராஜரத்தினமும், காணி நீர்ப்பாசன அமைச்சின் சிரேஷ்ட உதவிக் காரியதரிசி திரு. ரி. சிவஞானமும் நேற்று வாஷிங்டன் பயணமாஞர்கள்.

### கோணுவத்தை ஆற்றின்மீது பாலம்

நிந்தாவூர் தொகுதி ஆட்சி மன்ற உறுப்பினரான ஜனுப் எம். எம். முஸ்தபா ஆற்றுப் பள்ளத்தாக்குகள் அபிவிருத்திச் சபை தலைவர் திரு. எம். ஜே பெரேராவுக்கு விடுத்த அவசர வேண்டுகோளின் பேரில் மேற்படி சபை, அட்டாளைச் சேனை கிராமத்திலுள்ள கோணுவத்தை ஆற்றின் மீது ஒரு பிரமாண்டமான பாலத்தை கட்டிமுடிக்கும் வேலையில் தீவிரமாக ஈடுபட்டுள்ளது.

### முஸ்லீம் மாணவர் உயர் கல்வி

முஸ்லீம் மாணவர்களின் உயர் கல்வி சம்பந்தமாக அகில இலங்கை முஸ்லீம் கல்வி மாநாடு இம்மாதம் 11-ம் திகதி உயர் கல்வி சம்பந்தப்பட்ட ரோயல் கமிஷன் முன்பு சாட்சியமளிக்கும்.

இத் தூதுக்கோஷ்டியில் செல்பவர்கள், சாட்சியமளிக்கும் போது வழங்கும் மகஜர்கள் சம்பந்தமாக அகில இலங்கை முஸ்லீம் கல்வி மாநாடு இன்று கொழும்பு சாகிராக் கல்லூரியில் கூடித் தீர்மானிக்கவிருக்கிறது.

### கலைக்கப்பட்டன

கிளிநொச்சிப்பட்டின சபை, காஹவத்தை பட்டின சபை மெதப்பற்று தெற்கு கிராமசபை ஆகிய மூன்று ஸ்தலஸ்தாபனங்களும் தமது கடமைகளைச் சரிவரச் செய்யத்தவறியதஞல் உள்ளூராட்சிஅமைச்சர் திரு ஆர் பிரேமதாசாவிஞல் கலைக்கப்பட்டுள்ளன.

### பிரதமர் திறந்துவைப்பார்

காலி பெட்டிகாவத்தை என்ற இடத்தில் புதிதாக அமைக்கப்பட்டுள்ள 1400 அடி நீளமும் 60 அடி அகலமுமான ‘சமுத்திரதிரை’ கடலோரப் பாதையைப் பிரதமர் திரு. டட்லி சேனநாயக்கா இம்மாதம் 17-ந் திகதி திறந்துவைப்பார்.

### சுழிக்குப் பலியாகினர்

நேற்று முன்தினம் முறையே 19, 17, 21, 19 வயதான நான்கு இளம் பெண்கள் தேயிலைக்கொழுந்து பறித்துவிட்டு மொரவக்கை என்னுமிடத்தில் உள்ள கங்கையில் நீராடிக்

வங்கிக் கிளையின் அலுவலகத்தின் இரு பெரிய ஜன்னல்கள்மீது உருக்குக்கம்பித்துண்டொன்று வீசப்பட்டதன் விளைவாக ஐயாயிரம் ரூபாவுக்கு மேல் சேதமேற்பட்டுள்ளதென மதிப்பிடப் பட்டுள்ளது.

### புத்தளத்தில் சிமெந்து தொழிற்சாலை

புத்தளம் சிமெந்துத் தொழிற்சாலையை இம்மாதம் 20-ம் திகதி பிரதமர் திரு. டட்லி சேனநாயக்கா திறந்துவைப்பார். இத் தொழிற்சாலை வருடம் ஒன்றுக்கு 4 லட்சத்து 40 ஆயிரம் தொன் சிமெந்து உற்பத்திசெய்யுமென எதிர்பார்க்கப்படுகிறது

### குருநாகல் முதலிடம்

1968-69-ம் வருடத்தில் குருநாகல் மாவட்டத்தில் சிரமதான இயக்கத்திஞல் 5 லட்ச ரூபாவுக்கான வேலை நடந்துள்ளது: இச் சிரமதான இயக்கத்துககு தலைவராயுள்ள அரசாங்க அதிபர் திரு. எச். பி. திஸநாயக்கா அகில் இலங்கையிலும் சிரமதானத்தில் குருநாகல் மாவட்டம் முதலிடம் வகிக்கிறது’ எனத் தெரிவித்துள்ளார்.

### 120 தொகுதிகளில் போட்டி

ஐக்கிய தேசியக் கட்சி அடுத்த பொதுத்தேர்தலில் வடக்குக் கிழக்குப் பகுதிகள் உட்பட 120 தொகுதிகளில் போட்டியிடுமென்று இராஜாங்க அமைச்சர் திரு. ஜே. ஆர். ஜெயவர்த்தஞ தெரிவித்துள்ளார்.

### 18 பெட்டிகள் தடம்புரண்டன

கடந்த வெள்ளிக்கிழமை தடம்புரண்ட ‘குட்ஸ் ரெயில்’ வண்டி விபத்தில் யாருக்கும் எதுவித ஆபத்தும் ஏற்படவில்லை. 18 சாமான் பெட்டிகளே கவிழ்ந்து நாசமாகின. இப்போ வழமைபோல் புகைவண்டிப் போக்குவரத்து நடைபெறுகின்றன.

— —

### பெயர்ப்பலகை திரைநீக்கம்

சுழிபுரம், ஞாயிறு

பண்ணுகம் விசவத்தனை முருகமூர்த்தி கோவிலுக்கு அருகாமையிலுள்ள ஒழுங்கைக்கு விசவத்தனை முருகமூர்த்தி கோவில் வீதியென பெயர் சூட்டப்பட்டுள்ளது. பெயர் பலகையை சுழிபுரம் சபைத் தலைவர் திரைநீக்கம் செய்துவைத்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### மணிவாக்கு

பொருள் ஆசையைக் குறித்து எச்சரிக்கையாக இருக்வேண்டும். ஏனெனில் ஒருவனுக்கு எவ்வளவு திரளான ஆஸ்தி இருந்தாலும் அது அவனுக்கு ஜீவனல்ல. — இயேசுநாதர்.


# ஈழநாடு

Eelanadu National Tamil Daily
Telegram: "ELLANADU" Jaffna.
Post Box: 49, Jaffna. Telephone: 389.

யாழ்ப்பாணம் சௌமிய வருஷம் மாசிமாதம் 26-ந் திகதி (9-3-70)


## அடுத்த பொதுத்தேர்தல்

ஆட்சிமன்றம் எப்போது கலைக்கப்படும்; அடுத்த தேர்தல் எப்போது நடைபெறும் என்ற கேள்விகள் சமீப மாதங்களில் அரசியல் வட்டாரங்களில் மட்டுமல்லாது நாடெங்கிலுமே பொதுவாகக் கேட்கப்பட்டுவந்தன. பலரும் ஹேஸ்யங்கள் கூறியும் வந்தனர். ஆட்சிமன்றம் எப்போது கலைக்கப்படும் என்ற கேள்விக்கு இப்போது விடை கிடைத்துவிட்டது. இம்மாதம் 25-ம் திகதி ஆட்சிமன்றம் கலைக்கப்படும் என்று பிரதமரே அறிவித்துவிட்டார். அடுத்த தேர்தல் எப்போது என்ற கேள்விக்கு விரைவில் விடை கிடைத்துவிடும். அடுத்தது என்ன? இதற்கு இந்நாட்டு மக்கள் அதாவது வாக்குரிமை பெற்றுள்ள வயது வந்தோர் பதில் சொல்ல வேண்டும்.

திரு. டட்லி சேனநாயகாவின் தலைமையிலான தேசிய அரசாங்கம் ஆட்சிக்கு வந்து இம்மாதம் 25-ம் திகதியுடன் ஐந்து வருடங்கள் நிறைவுபெறுகின்றன. சுதந்திர இலங்கையின் சரித்திரத்தில் ஒரு பிரதமர் ஐந்து ஆண்டுகாலமும் பதவி வகித்தார் என்ற பெருமை திரு. டட்லி சேனநாயகாவையே சாரும்.

இலங்கையின் அரசமைப்புச் சட்டப்படி ஐந்து ஆண்டுகளுக்கு ஒருமுறை பொதுத் தேர்தல்நடைபெற்று மக்கள் தங்கள் விருப்பத்துக்கேற்றவர்களை ஆட்சிபீடத்தில் அமர்த்தவேண்டும். இந்த அரசாங்கத்தின் ஆட்சிக் காலம் 25-ம் திகதியுடன் முடிவடைகிறது, அன்றே ஆட்சிமன்றமும் கலைக்கப்படுகிறது, அடுத்த பொதுத் தேர்தல் வாக்களிப்பு மூன்று மாதத்திற்குள் நடைபெறும். ஆளும் கட்சிகள் மட்டுமல்லாது எதிர்க்கட்சிகளும் சுயேச்சையாளர்களும் கூட கடந்த பல மாதங்களாகத் தேர்தலுக்குத் தங்களைத் தயார்செய்து வந்திருக்கின்றனர். 'அடுத்த பொதுத் தேர்தலில்தான் ஆசியல்...

...அமரும் வாய்ப்புப்பெற்றுள்ளவை. அதாவது திரு. டட்லிசேனநாயகா அல்லது திருமதி சிறிமாபண்டாரநாயகா பிரதமராக வருவார், பெரும்பான்மைச் சமூக மக்களின் வாக்குகளையே பெற்று அவர்களுக்குக் கொடுத்த வாக்குறுதிகளை நிறைவேற்றுவதுதான் தங்கள் கடமையென்றும் அவர்கள் கருதுவதில் என்ன தவறு? அரசியலமைப்பு முறைமீதுதான் தவறு சொல்லவேண்டும். இந்த நாட்டில் வாழும் சிறுபான்மையினர் குறிப்பாக இரண்டாவது பெரிய சமூகமாக விளங்கும் தமிழ் மக்களைப்பொறுத்தவரையில கடந்தகால அனுபவங்களைச் சிந்தித்துப் பார்க்கவேண்டியது அவசியம்.

தமிழ் மக்கள் தங்களுக்குள்ள வாக்குரிமையைப் பயன்படுத்தி தங்கள் விருப்பத்துக்கேற்றவர்களை ஆட்சிமன்றத்துக்குத் தெரிவு செய்து அனுப்புகிறார்கள் அந்தப் பிரதிநிதிகள், அவர்களுக்குள் கட்சி அரசியல் கொள்கை வேறுபாடுகள் இருப்பினும் ஒருசில விஷயங்களில் அவர்கள் ஒற்றுமையாக விடுத்த கோரிக்கை கூட நிறைவேற்றப்படவில்லை. தமிழ்மக்களின் பிரதிநிதிகளின் கோரிக்கையை சிங்கள மக்களின் பிரதிநிதிகள் ஒருசிலர் எதிர்த்தாலும் அந்த எதிர்ப்புக்குத்தான் ஆட்சிபீடம் மதிப்புக்கொடுக்கிறதேயொழிய தமிழ் மக்கள் தெரிவுசெய்து அனுப்பிய பிரதிநிதிகளின் கோரிக்கைகளுக்கு மதிப்புக் கொடுப்பதாக இல்லை. போதனுமொழிப் பிரச்னையும் வடபகுதியிலிருந்து இராணுவத்தைத் திரும்பிப் பெறவேண்டுமென்ற விஷயமும் இதற்குத் தகுந்த உதாரணங்கள் அரசாங்கத்தை எதிர்த்து நின்றாலும்சரி அரசாங்கத்துடன் சேர்ந்து ஒத்துழைத்தாலும் சரி இதே நிலைதான் என்பதையும் கடந்த காலச் சம்பவங்கள் உணர்த்தியுள்ளன. இப்...

### இன்று ஜனனதினம்

# ஞானக்களஞ்சியம் ஸ்ரீபரமஹம்ஸர்

— சுவாமி சர்வதீதானந்தா —

நூற்று முப்பத்தைந்து வருடங்களுக்கு முன் வங்காளத்தில் ஒரு சிறிய கிராமத்தில் பகவான் ஸ்ரீ இராமகிருஷ்ணர் அவதரித்தார். அவருடைய ஜயந்தி தினத்தை பல்லாயிரம் மைல்களுக்கு அப்பால் வதியும் நாம் சிறப்பாகக்கொண்டாடுகின்றோம். இன்னும் உலகின் பல இடங்களிலும் அவருடைய ஜயந்தி தினத்தைக் கொண்டாடுகின்றனர். இன்னும் ஆயிரம் ஆண்டுகள் ஆயினும் இவ்வைபவத்தைச் சிறப்பாகக் கொண்டாடுவர் என்பதில் ஐயம்இல்லை. அம்மகானின் பெயரில் உலக முழுதும் நடத்தப்படுகின்ற பள்ளிக்கூடங்கள், மருந்து சாலைகள், அனாதை இல்லங்கள் ஆகியவற்றின் எண்ணிக்கை கணக்கில் அடங்கா அவர் ஓர் அவதாரபுருடர் என்பதினால்தான் நாம் அவரைக் குறித்து இன்று விழா வெடுக்கின்றோம்.

எளியகுடும்பத்தில் ஸ்ரீராமகிருஷ்ணர் பிறந்து வளர்ந்தார். எழுதப்படிக்க அவருக்குத்தெரியாது. எனினும் அவர் பேசியதெல்லாம் பெரியதத்துவங்களே. அவர் மொழிகளெல்லாம் உபநிடதங்களே பழங்கால ரிஷிகளைப்பற்றி நாம் கேள்விப்பட்டிருக்கின்றோம். அவர்களுடைய சொற்கள் மந்திரங்களாகவும் வேதங்களாகவும் மாறின. அதேபோல் ஸ்ரீராமகிருஷ்ணரின் பொன்மொழிகள் ஆழ்ந்த தத்துவங்களைப் பிரதிபலிக்கின்றன.

மேலும் அவருடைய பண்பும் ஆசாரமும் நமது தேசத்தின் கலாசாரங்களை ஒட்டியுள்ளன. இவ்விஷயத்தினை நம் இளம் மாணாக்கர்கள் முக்கியமாகக் கவனிக்க வேண்டும். தன்னை நாடிவருபவர்களுக்கு உபதேசிக்க உபகதைகளை கையாள்வது இவரது வழக்கம். ஆதிசங்கரர் பெரிய தத்துவங்களை எளிய முறையில் உபகதைகள் மூலம் மிகவும் தெளிவாக விளக்கியுள்ளார். ஸ்ரீ ராமகிருஷ்ண பரமஹம்சர் திருவாய்மலர்ந்தருளிய உபகதைகளில் உயரியபக்தி, ஞானம், வைராக்கியம், நீதிகள்பொலிந்துகிடக்கின்றன. தினசரி வாழ்க்கைக்கு உகந்த சிறந்த உபதேசங்கள் இவற்றுள் அடங்கியுள்ளன. இவைகளை உவமைக் கதைகள் என்றும் கூறலாம். நாம் இங்கு சிலவற்றை ஆராய்வோம்.

...என்று அறியாமல் திகைத்தான். கற்பதருவின் அடியில் இருப்பதை தான் உணரவில்லை. களைத்ததேகத்தில் உள்ள வலிவினை நீக்குவதற்கு இளமங்கையர் இருந்து கை கால்களைப் பிடித்தால் எத்துணைசுகமாய் இருக்கும் என்று நினைத்தான். நினைந்தகனத்திலேயே இருநங்கையர் தோன்றிப் பணிசெய்தனர். அவனது வியப்பு எல்லை மீறியது. பசித்துன்பம் நீங்க அறுசுவை உண்டி கிடைக்காதா என ஏங்கினான். அக்கணமே அவைகள் தோன்றின. உண்டபின் மெத்தையில் உறங்கிச் சுகம் அனுபவிக்குங்கால், இச்சமயம் ஒரு புலி வந்தால் என் செய்வது என்றுஎண்ணியதுதான் தாமதம் உடனே புலிவந்து அவனைக் கொன்றுவிட்டது. மனக்கோட்டையும், பேராசையும் அடியோடு அழிந்தது.''

இங்ஙனமேதான் உலகில் மனிதர்கள் அவா என்னும் வலைக்கண் அகப்பட்டு வீழ்கின்றனர். கடவுளும் நம்விருப்பங்களைக்கல்பகதரு போன்று இயன்றவரை நிறைவேற்றுவார். ஆசை நிறைவேறுங்கால் ''புலி வந்தால் என்ன செய்வது'' என்பதுபோல் பய நினைவு நம்மிடம் தோன்றும். நோய், ஏழ்மை, சாக்காடு உருவத்தில் அந்தப் புலி வரும். ஆகையால்தியானம், பக்தி, ஞானம் மூலம் ஆசைகளைச் சிறிதுசிறிதாக நீக்கல் இன்றியமையாததாகும்.

ஸ்ரீராமகிருஷ்ணபகவான், ஸ்ரீசாரதாதேவியாரை மணந்துகொண்டுநம்மைப்போல் இல்வாழ்க்கைநடத்தவில்லை. அதற்கு அவர் கூறியுள்ள உபகதையினை இங்கு சிந்திப்போம். ''ஒருநாள் கார்த்திகேய பகவான் ஒருபூனையினை தன் நகத்தால் புண்படு[illegible]தியபின் அன்னை பார்வதிதேவியிடம் சென்றார். அன்னையியின் முகத்தில் கீறியவடு ஒன்றிருப்பதைக் கண்டு கார்த்திகேயபகவான் வினவலானார். ஜகன்மாதா, ''அது உன்கைநகம் செய்த [illegible]ல்தான்'' என்றார். அதற்[illegible] கார்த்திகேயன் ''உங்களை ஒருபோதும் புண்படுத்தியதில்லையே'' என்று கூற [illegible] பூனையினை [illegible] [illegible] நினைவுபடுத்தினார். பூ[illegible]யைக் கீறினால் நம்முக...

தோன்றினார்கள். ஸ்ரீராமகிருஷ்ணர் ஸ்ரீசாரதாதேவியாரை பூஜாபீடத்தில் அமரச் செய்து 'சோடசபூஜை செய்துள்ளார். இவ்விடத்தில் நாம் நம் தூய அன்னையாரை மிகவும் பாராட்ட வேண்டும். மாதர் குலமாணிக்கங்களானசீதா, சாவித்திரி போன்றவரே ஸ்ரீசாரதா தேவியாரும் அவரைப் பகவான் வினவிய பொழுது இத்தூயவாழ்வினை வாழ்வதற்குகு தேவிமுன் வந்திராவிட்டால் ஸ்ரீ ராமகிருஷ்ணரின் அவதாரம் ஒருவேளை பயனற்றிருக்கும்.

துறந்தோர் தவம் பண்ணுதல் பல சித்திகளை அடைவதற்கு வழியாகும். ஆனால் இவற்றால் யாதொரு பயனும் இல்லையென்று காட்ட பரமஹம்சர் ஒருசான்றுகூறியுள்ளார். ஒரு சந்நியாசி தன் தவவலிமையால் தான் அடைந்த சித்திகளைப் பற்றிப் பெருமைகொண்டான். பரமஹம்சரிடம் தான்நீரின் மேல் நடக்க இயலும் எனக் கூறினான். ஸ்ரீ இராமகிருஷ்ணர் அவனுடைய சித்தி ஒரு பணம்தான் பெறும் என்று பதில் உரைத்தார். அக்காலத்தில் கங்கை நதியைக்கடக்க ஒரு பணம் தான். ஆகையினால் தான் பரமஹம்சர் இவ்வாறு சொன்னார், ஆகையினால் சந்நியாசிகள் தங்கள் தவவலிமையால் அடையும் சித்திகளைப்பற்றிப் பெருமிதம் கொள்ளக்கூடாதென்றும் அவைகள் கடவுளை அடைவதற்குத் தடைகள் என்றும் விளக்கியுள்ளார்.

பரமஹம்ஸரின் முதற் சீடர் சுவாமி விவேகானந்தராவர். அவர் கல்லூரியில் பயின்றுகொண்டிருக்கையில் மனச்சாந்தி அடையமுடியாமல் காண்கின்ற பெரியவர்களையும், சாதுக்களையும் 'நீங்கள் கடவுளைக் கண்டதுண்டா' என வினவுவார். ஆனால் ஒருவரும் அவருக்கு மனநிறைவு உண்டாகும் முறையில் பதிலளிக்கவில்லை. பரமஹம்சரிடமும் வந்து அதே கேளவியைக் கேட்டார். அதற்குப் பர[illegible]ஹம்ஸர் 'காண்கின்றேன், உன்னைக் காண்பதிலும் மிகத் தெளிவாகக்காண்கின்றேன். [illegible] காட்டமுடியும்' [illegible]கூறி அனேகமுறை ஆனந்தவெள்ளத்தில் [illegible]ழ்த்தியம்விட்டார். இச்[illegible]...

## புதிய நிர்வாகிகள்

கைதடி, ஞாயிறு

எரிதிடல் நவநூல் நிலையத்திற்கருகாமையில் திரு. நா மாணிக்கத்தின் தலைமையில் நடந்த எரிதிடல் இளந்தமிழர் சங்கக் கூட்டத்தில் பின்வருவோர் நிர்வாகிகளாகத் தெரிவு செய்யப்பட்டனர்.

தலைவர்: வி வாமதேவன், உபதலைவர்: கே சிவபாலசிங்கம், காரியதரிசி: எஸ் சின்னத்துரை, உப காரியதரிசி; எஸ் பேரம்பலம், பொருளாளர்: எஸ் பாலச்சந்திரன், பரிசோதகர்: வி சண்முகநாதன். 7 பேர் கொண்ட நிர்வாக உறுப்பினரும் தெரிவு செய்யப்பட்டனர்.

......

உள்நாட்டு இ. வ. தி.

## தமிழ் இலக்கிய மன்ற நிர்வாகிகள்

வெள்ளவத்தை, திங்கள்

உள்நாட்டு இறைவரித் திணைக்களத் தமிழ்இலக்கிய 1970-ம் ஆண்டுப்புதிய அலுவலர்களாகப்பின்வருவோ[illegible] தெரிவு செய்யப்பட்டுள்ளனர். தலைவர்: திரு. க. இராசசிங்கம், துணைத்தலைவர்கள்' திரு த சு சுந்தரேசுவரன். திரு என் நடராச பிள்ளை, செயலாளர்: திரு இரா பேரம்பலம், துணைச் செயலாளர்: திரு ந தங்கராசா, பொருளாளர்: திரு மு சிவபாதசுந்தரம், துணைப் பொருளாளர்: திரு சி பத்மயோகன், நூலகர்: திரு வி சிங்காரவேலு, துணை நூலகர்: திரு சு சோமசேகரம்.

செயற்குழு உறுப்பினர்கள் வி பத்மநாதன், த சிவசுப்பிரமணியம், சபா இராஜேந்திரம், கே. கோபாலபிள்ளை, ம தன பாலசிங்கம், து பாலசுப்பிரமணியம், செல்வி பா. கந்தப்பிள்ளை, செல்வி புவனேஸ்வரி கந்தவனம், எஸ் எஸ் சணேசபிள்ளை, க இலட்சுமணன்.

## ஐக்கிய லாபந்தி

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

கேசு, எஸ் விசுவலிங்கம்' சண்டிலிப்பாய்: ரி துரைராசா, எம் மலையாண்டி சுன்னாகம்: வி நவராசா, ...

## யோகசுவாமிகள் தம்மைக் கவர்ந்தாராம்

### யாழ்ப்பாணத்தில் மலேசியத்துறவி

(நமது நிருபர்)

சுழிபுரம், ஞாயிறு

மலேசிய நாட்டில் தெய்வீக வாழ்க்கைச் சங்கத்தலைவராக விளங்கும் சுவாமி பிரணவானந்த சரஸ்வதி உலக நாடுகள் பலவற்றில் சமயச் சொற்பொழிவுகள் நிகழ்த்திவிட்டு யாழ்ப்பாணம் வருகை தந்துள்ளார். கடந்த சில தினங்களாக யாழ்ப்பாணத்தில் பல்வேறு இடங்களில் சுவாமிகள்சமய விளக்கங்கள், சொற்பொழிவுகள் நிகழ்த்திவருகின்றார். கீரிமலையிலுள்ள சிறுப்பர் மடத்திலும் வழக்கறிஞர் என். சூரசங்காரம் இல்லத்திலும் தங்கியுள்ள சுவாமி பிரணவானந்த சரஸ்வதி இலங்கையிலுள்ள பல்வேறு இடங்களையும் பார்வையிடுவதுடன் ஆங்காங்கே சொற்பொழிவுகள் நடாத்தவுள்ளார். சிரித்த முகத்துடனும் தெய்வீக ஒளியுடனும் விளங்கும் சவாமிகள் தமக்கு யாழ்ப்பாணத்தில் அதிக நண்பர்கள் இருப்பதாகவும் அவர்கள் எல்லோரையும் நேரில் சந்திக்கக்கூடிய வாய்ப்புப் போதாமையிருப் பதாகவும் தெரிவித்தார், மலேசியாவில் தாம் முன்னர் எழுதுவினைஞராகக் கடமையாற்றியதாகவும் ஏதோ பூர்விகத் தொடர்பு இருந்ததனால்தான் இத்துறையில் ஈடுபடும் பாக்கியம் கிடைத்ததாகவும் யாவருக்கும் தொண்டுசெய்யப் பெரும் வாய்ப்புக் கிடைத்துள்ளதாகவும் பெருமிதத்துடன் சுவாமிகள் தெரிவித்தார். மலேசிய நாட்டில் பலவகையான நல்லபணிகளைச் சங்க மூலம் செய்துவருவதாகவும் மேலும் பல பணிகளை ஆற்ற விருப்பதாகவும் தெரிவித்தார். யாழ்ப்பாணத்திலுள்ளவர்கள் மிகவும் நல்லவர்களென்றும், யோகசுவாமிகளின் கருத்துக்கள்தம்மைக் கவர்ந்ததாகவும் சுவாமிகள் கூறினார்.

## 'குறைந்தது ரூ 210 சம்பளம் தொழிலாளிக்கு வழங்குக''

### காங்கேசன்துறை சிமெந்து உற்பத்தி தொழிலாளர் சங்கம் கோரிக்கை

மாவிட்டபுரம், திங்கள்

தொழிலுக்குரிய பெயரும் சேவைக்குரிய கட்டுப்பாடும் ஒவ்வொரு தொழிலாளர்களுக்கும் கொடுக்கப்படும் நியமனப் பத்திரத்தில் வழங்கப்பட வேண்டும் என காங்கேசன்துறை சிமெந்துஉற்பத்திதொழிலாளர் சங்கம் கைத்தொழில் அமைச்சருக்கும் கூட்டுஸ்தாபனத் தலைவருக்கும் அனுப்பியுள்ள மகஜரொன்றில் கேட்டுள்ளது.

தொழிலாளிக்கு ஆகக் குறைந்த சம்பளம் 210 ரூபாவாக இருக்க வேண்டும் என்றும் கூட்டுஸ்தாபன தலைவரால்ஒத்துக்கொள்ளப்பட்டபடி 1960-ம் ஆண்டு நடந்த தொழில் மதிப்பில் பாதிக்கப்பட்ட தொழிலாளர்களுடைய சம்பளம் திருத்தி அமைக்கப்படல் வேண்டுமென்றும் 1-4-66ம் திகதி தொடக்கம் தொழிலாளர்களுக்கு மாற்றப்பட்ட வேதனம் படிப்படியான சம்பள மாற்றம் மற்றும் இரண்டு மாத ஆதாயப்பணம்கொடுபட வேண்டுவதுடன் 14 ...

...கப்பட வேண்டும் என்றும், வைத்திய உதவித்திட்டம் தமது கூட்டுஸ்தாபனத் தொழிலாளர்கட்குவழங்கப்படவேண்டும் என்றும் அரசாங்கவைத்திய பத்திரத்திற்கு தொழிலாளர் களால் கொடுக்கப்படும் ரூ. 10.50 சதத்தையும் கூட்டுஸ்தாபனம் கொடுக்க வேண்டுமென்றும் மகஜரில் மேலும் கேட்கப்பட்டுள்ளது

சகல தொழிலாளர்களையும் ஒரே சட்டத்தின் கீழ் கொணடுவருதல் உட்பட 25 கோரிக்கைகள் மகஜரில் இடம் பெற்றுள்ளன.

## பாலைதீவு விபத்து ரூ. 1000 பிணையில் செல்ல அனுமதி

யாழ்ப்பாணம், திங்கள்

பாலைதீவுப் படகு விபத்து சம்பந்தமபகக் கைதுசெய்பட்டுப் பொலிஸ் பாதுகாப்பில் வைக்கப்பட்டிருந்த பிலிப் ஜஸ்டின், அருளப்பு சந்தியாகோ ஆகிய இரு...

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

ஆளும் கட்சிகள் மட்டுமல்லாது எதிர்க்கட்சிகளும் சுயேச்சையாளர்களும் கூட கடந்த பல மாதங்களாகத் தேர்தலுக்குத் தங்களைத் தயார்செய்து வந்திருக்கின்றனர். 'அடுத்த பொதுத் தேர்தலில்தான் அரசியல்வாதிகளுக்குக் கண்' என்ற ஓர் அனுபவ உரைக்கிணங்க தேர்தல் எப்போது நடந்தாலும் அரசியல்வாதிகள் அதற்குத் தயாராக இருப்பார்களென்பது தெளிவு. அதற்காக அவர்கள் மீது குறைசொல்வதற்கும் இடமில்லை.

தேர்தல் எப்போது நடந்தாலும் சரி நமது நாட்டு ஆட்சிஅமைப்பு முறையின் கீழ் பெரும்பான்மை சமூகத்தவர்களின் பெரும்பான்மை வாக்குகளைப் பெறும் ஓர் அரசியல் கட்சியோ அல்லது சில கட்சிகள் சேர்ந்த கூட்டணியோதான் ஆட்சிபீடத்தில் அமரும். இன்னும் தெளிவாகச் சொன்னால் சிங்களமக்களின் ஆதரவைப் பெறும் கட்சி அல்லது கட்சிகளின் கூட்டணிதான் அரசாங்கம் அமைக்கும் அந்தச் சமூகத்தைச் சேர்ந்த ஒருவர் தான் பிரதமராக வருவார், கடந்தகால அனுபவத்திலும் இப்போதுள்ள நிலையிலும் ஐக்கியதேசியக் கட்சியும் அதனுடன் கூட்டுச் சேர்ந்துள்ள சில கட்சிகளும் அல்லது ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியும் அதனுடன் கூட்டுச் சேர்ந்துள்ள கட்சிகளும்தான் ஆட்சிபீடத்தில்

மும் இதற்குத் தகுந்த உதாரணங்கள் அரசாங்கத்தை எதிர்த்து நின்றாலும்சரி அரசாங்கத்துடன் சேர்ந்து ஒத்துழைத்தாலும் சரி இதே நிலைதான் என்பதையும் கடந்த காலச் சம்பவங்கள் உணர்த்தியுள்ளன. இப்போதுள்ள அரசியலமைப்பு முறை இருக்கும்வரை இதே நிலைதான் நீடிக்குமென்பது உண்மையே. ஆயினும் தமிழ்மக்களை விட சிறுபான்மையினராக வாழும் இதர சமூகத்தினர் தங்கள் கோரிக்கைகளைப் பெறுவதிலும் உரிமைகளை நிலைநாட்டுவதிலும் வெற்றிபெற்றுள்ளனர்? இது ஏன்? அவர்களின் ராஜதந்திரமா?

அடுத்துவரும் பொதுத் தேர்தலுக்கு முன்னர் இன்றைய அரசியல் அமைப்பை திருத்தவோ மாற்றவோ முடியுமென எதிர்பார்ப்பதற்கில்லை. அரசியல் அமைப்பைத் திருத்த வேண்டுமென்றும் புதிய அரசியலமைப்பை உருவாக்க வேண்டுமென்றும் பெரும்பான்மைச் சமூகத்தைச் சேர்ந்தவர்களும் விரும்புகிறார்கள். அதற்கு வெவ்வேறு காரணமும் உண்டு. அடுத்த தேர்தல் முடிந்த பின்னராவது அவர்களின் ஒத்துழைப்புடன் இதை நிறைவேற்றச்செய்ய தமிழ்ப் பிரதிநிதிகள் தக்கமுயற்சி செய்யவேண்டும். அரசியல் அமைப்பு மாறுதவரை சிறுபான்மையினருக்கு குறிப்பாக தமிழ்மக்களுக்கு இதே நிலைதான் நீடிக்கமுடியும்.

## சந்திர வீரர்

சந்திரனில் கால்வைத்து சாதனையை நிலைநாட்டி உலக வரலாற்றையே மாற்றியமைத்த அப்பல்லோ-12 வீரர்கள் குடும்ப சகிதமாக இம்மாதம் 13-ம் திகதி இலங்கைக்கு வருகைதரவிருக்கிறார்கள், அவர்களை இந்த நாட்டு மக்கள் உற்சாகமாக வரவேற்கக்காத்திருக்கிறார்கள், மகிழ்ச்சி தரும் நிகழ்ச்சி இது.

சந்திரனில் கால்வைத்த முதல் மனிதர்களான ஆல்டிரினும் ஆம்ஸ்ரோங்கும் இங்கு வரவில்லையானாலும் அவர்கள் கொண்டு வந்த சந்திரக்கல் ஒன்று இலங்கைக்கு வந்து திரும்பியது. இதிலும் நாம் பெருமை கொள்ளலாம். இப்போது இங்கு வருபவர்கள் அப்பல்லோ - 12 வீரர்களான சார்ள்ஸ் கொன்ருட் ரிச்சர்ட்கோல்டன் அலன்பீன் ஆகிய மூவருமாவர்.

சந்திரக்கல் கொழும்புக்கு வந்து கண்டிக்குச் சென்று திரும்பியது.

அப்பல்லோ-12 வீரர்களும் கூட கொழும்புக்கு வந்து கண்டிக்குச் சென்று திரும்பப் போகிறார்கள். இதுதான் இப்போதுள்ள அவர்களின் நிகழ்ச்சித் திட்டம்.

கொழும்பும், கண்டியும் தானா இலங்கை; அங்கு மட்டும்தானா மக்கள் வாழ்கிறார்கள்.

வடக்கிலும் கிழக்கிலும் வாழும் மக்கள் மக்களல்லவா? ஏன் இந்தப் புறக்கணிப்பு? இதைத் தட்டிக் கேட்க ஆளில்லையா?

### பாஷாண உத்தியாபனம்

சிவபதம் அடைந்ததந்தையார் ஸ்ரீமத் சிவ. சுப்பிரமணிய தேசிகர் அவர்களது பாஷாண உத்தியாபனக் கிரியைகள் (கல்லெடுப்பு) 10-3-70 செவ்வாய்க்கிழமை காலை காரைநகரில் நடைபெறும். அன்பர்களும் உறவினர்களும் இவ்வழைப்பைத் தயவுசெய்து ஏற்றுக்கொள்ளவும். சு. சதாசிவக் குருக்கள் ஆலடி, காரைநகர், சு. சிவசங்கரன் ஹாட்லிக் கல்லூரி, பருத்தித்துறை, சு. சண்முகரத்தினம் யாழ்ற்றன் கல்லூரி, காரைநகர்.

1662

[illegible] தினசரி வாழ்க்கைக்கு உகந்த சிறந்த உபதேசங்கள் இவற்றுள் அடங்கியுள்ளன. இவைகளை உவமைக் கதைகள் என்றும் கூறலாம். நாம் இங்கு சிலவற்றை ஆராய்வோம்.

ஆசாபாசங்களால் ஏற்படும் அபாயங்களைப்பற்றி அவர் ஓர் அழகிய உபகதை கூறியுள்ளார். வெய்யிலில் அலைந்து திரிந்த ஓர் தேசாந்திரி தூரத்தில் ஓர் மரத்தைக்கண்டு அதன் நிழலில் களைப்பாறச்சென்றான் அங்கு சென்றவுடன் ஓர் நல்ல மிருதுவான மெத்தை இருந்தால் எவ்வளவு சுகமாய் உறங்கலாம் என்று எண்ணினான். உடனே தன் பக்கத்தில் ஓர் மெத்தை இருக்கக்கண்டான் இது எவ்விதம் நிகழ்ந்தது

... கார்த்திகேயன் ''உங்களை ஒருபோதும் புண்படுத்தியதில்லையே'' என்று கூற தாயார் அவருக்கு பூனையினை காலையில் கீறிய த... நினைவுபடுத்தினார். பூனையைக் கீறினால் நும்முகத்தில் வடுஏற்படக் காரணம் என்ன என்று கார்த்திகேயன் வினவ தாயார். 'உலகத்திலுள்ள எல்லா உயிர்களிடத்திலும் நான் இருக்கின்றேன். எவ்வுரியினைத் துன்புறுத்தினாலும் அதுஎன்னை வருத்தியதாகும் என்று பதில் இறுத்தார். கார்த்திகேயன் அன்றே தான் ஒரு பெண்ணையும் மணப்பதில்லை என உறுதி கொண்டார். ஏனெனில் ஒவ்வொரு மாதும் அவனுக்குத் தாயாகவே

... ஸர் 'காண்கின்றேன், உன்னைக் காண்பதிலும் மிகத் தெளிவாகக்காண்கின்றேன். உனக்கும் காட்டமுடியும்' என்றுகூறி அனேகமுறை ஆனந்தவெள்ளத்தில் ஆழ்த்தியும்விட்டார். இச்செய்கையினால் விளைந்த பயனைத்தான் நாம் இன்று காண்கின்றோம், அனுபவிக்கின்றோம். இதுஇந்தியாவுக்கு மட்டுமின்றி முழுஉலகிற்குமேஒரு புத்துணர்ச்சியூட்டி, இராமகிருஷ்ண இயக்கம் ஆரம்பிப்பதற்கும் வித்தூன்றியது போலாகும். இன்று நாம் அவர்களின் உபதேசங்களை நன்கறிந்து, நம்மால் இயன்றளவு கடைப்பிடித்து தினசரி வாழ்க்கையில் வாழ்ந்து பிறரையும் ஈடேறச் செய்வோமாக.

# "இன்னும்பத்து ஆண்டுகளில் நம் எழுத்தாளர் நிலைமாறும்"

## நாடகநூல் வெளியீட்டு விழாவில் உரை

யாழ்ப்பாணம், திங்கள்

''ஈழத்தில் எழுத்தாளர் பலரும் குத்துவிளக்கைப் போல் இருக்கின்றனர். அவர்களுக்குச் சொந்த நாட்டில் மதிப்பில்லை. இது எமது பெரிய குறைபாடு. தென்னிந்தியாவில் இலக்கியரசனை மிகப்பரந்த அளவில் விரிவடைந்துள்ளதை நாம் கவனிக்க வேண்டும்.

இலக்கிய வரிசையில் ஓரங்க நாடகம் ஒரு முக்கிய துறையாகும். ஈழத்துத் தமிழ் நாடகாசிரியர்கள் ஓரங்க நாடகத்தில் அதிக கவனஞ் செலுத்த வேண்டும்''.

மு.கனகராசன் எழுதிய 'கமுனுவின் காதலி' என்ற ஓரங்க நாடகநூல் வெளியீட்டு விழாவுக்குத் தலைமை வகித்துப்பேசிய யாழ்ப்பாணப் பிரதேசக்கலை மன்ற இலக்கிய அவைத்தலைவர் திரு எஸ்.ஸ்ரீநிவாசன் கூறினார். திரு கனகராசனின் எழுத்தாற்றலை அவர் புகழ்ந்து பேசினார்.

நூலை வெளியிட்டுவைத்துப பேசிய 'தேவன் யாழ்ப்பாணம்' பேசுகையில், இந் நாடக நூலில் கமுனு தேசய ஒற்றுமையின் சிற்பியாகச் சித்தரிக்கப் பட்டிருப்பதாகவும், கமுனுவின் தேசப்பற்று நாடகத்தில் மிகத் தெளிவாகக் கூறப்பட்டிருப்பதாகவும் சொன்னார்.

ஒரு சிறுகதைக்கும் நாவலுக்குமுள்ள வேறுபாடே ஓரங்க நாடகத்திற்கும் முழு நீள நாடகத்திற்கு முண்டென்றும் இன்னும் சொல்லப் போனால் ஓரங்க நாடகம் மற்றெல்லா இலக்கியங்களிலும் மிக்க நுணுக்கமாக எழுதப்பட வேண்டியதென்றும், இவ்வகையில் 'கமுனுவின் காதலி'யின் ஆசிரியர் வெற்றியீட்டியுள்ளாரென்றும் திரு தேவன் சொன்னார்.

யாழ். இலக்கியவட்டத் தலைவர் கவிஞர் வி கந்தவனம் ஆய்வுரை செய்கையில் கூறியதாவது,

''ஈழத்தில் எம்மவரிடையே இலக்கிய உணர்வும் ரசனையும் முன்னையவிட அதிகரித்திருக்கிறது. இன்னும் பத்து ஆண்டுகளில் ஈழத்தமிழ் எழுத்தாளனின் மதிப்பு நிச்சயம் உயர்ந்து பிரகாசிக்கும்.

ஓரங்க நாடகமுறை தமிழுக்குப்புதிய ஒன்றல்ல. மகாபாரதத்திலும் கம்பராமாயணத்திலும் ஓரங்க நாடகங்களைக் காணலாம். அவற்றையெல்லாம் நம் எழுத்தாளர்கள் தனித்தனி பிரித்தெடுத்து ஓரங்க நாடகங்களாக்க வேண்டும்.

மல்லிகை ஆசிரியர் திரு. டொமினிக்ஜீவா தமது ஆய்வுரையில், வெறும் பிரசாரங்களை நம்பிவிடக் கூடாதென்றும், மனிதனிடமுள்ள மிக நல்ல பண்புகளை நெருங்கிப் பழகித்தான் அறிய முடியுமென்றும், கமுனு பற்றிய பிரசாரத்தை விடுத்து அவனை நாம் நுணுகி ஆராய்வோமானால் அவனது தேசிய உணர்வு புலப்படுமென்றும் சொன்னார்.

அவர் மேலும் பேசுகையில் சமீப காலத்திற்கிடையில் யாழ்.குடாநாட்டிலே இலக்கிய நூலாக்கங்களுக்காக ஐந்து லட்சம் ரூபா முடக்கப்பட்டிருப்பதாகவும், எழுத்தாளர்கள் தனித்தனியே தமது ஆக்கங்களை நூலாக்குவதன் மூலம் அதிக சிரமங்களும் நஷ்டமும் அடைந்து வருவதாகவும் கூட்டுறவு முறையில் நூல்கள் வெளிப்படுமானால் பலத்த லாபமேற்படுமென்றும் சொன்னார். கேரளத்தில் சில எழுத்தாளர்கள் சேர்ந்து ஐநூறு ரூபாவுடன் ஆரம்பித்த வெளியீட்டு நிறுவனம் இன்று பன்னிரண்டு லட்சம் ரூபா பெறுமதிக்கு உயர்ந்து பல இடங்களிலும் முப்பத்தாறு விற்பனை நிலையங்களைக் கொண்டுள்ளதாக அவர் சொன்னார்.

யாழ் மாநகரசபை உறுப்பினர் திரு ஏ.விசுவநாதன், பேசுகையில் கமுனுவின் சிறப்பியல்புகளையும் 'கமுனுவின் காதலி நூலில்காணும் நயங்களையும் எடுத்துரைத்தார்.

சங்கீதபூஷணம் திரு.எஸ். பாலசிங்கத்தின் இறைவணக்கத்துடன் விழா ஆரம்பமானது. ஆனைப்பந்தி உயர் கலைக்கல்லூரிமுகாமையாளர் திரு இ வி.கார்த்திகேசு நூல் முதற்பிரதியை வாங்கினார்.

இப்பத்திரிகை ஈழநாடு லிமிடெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன் கோவில் மேலை வீதி 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1970-ம் ஆண்டு மார்ச் மாதம் 9-ந் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

## ஐக்கிய லாபநி...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

கேசு, எஸ் விசுவலிங்கம். சண்டிலிப்பாய்: ரி துரைராசா, எம் மலையாண்டி. சுன்னாகம்: வி நவராசா, ஏ. தம்பிப்பிள்ளை. சங்கானை: ரி விஸ்வலிங்கம், பொ அப்பாத்துரை. சங்கரத்தை: எஸ். செல்லையா, தே வயிரவநாதன். சித்தன்கேணி: இ சிவமயம், ஏ நடராசா. சுதுமலை: எஸ். தம்பிஐயா, எஸ். தேவராசா. சுழிபுரம்: திருச்செந்தூர், சிற்றம்பலம். காரைநகர்: ஏ முருகேசு, ஏ விநாயக சிவம்பிள்ளை. குப்பிளான்: ஏ கந்தையா. கொடிகாமம்: ஐ முருகேசு. கைதடி-நாவற்குழி: வி எஸ் கந்தையா. கொக்குவில்: எம் மங்களேஸ்வரன், டாக்டர் எஸ் இராசரட்டினம். கட்டுடை: ஆர் நகுலேஸ், கனகரட்டினம். கோப்பாய்-நீர்வேலி: எஸ் ஏ குமாரசாமி, எம் நல்லையா. புத்தூர்: எஸ் சோமசுந்தரம், என் எஸ் கந்தையா. கரவெட்டி-கரணவாய்: கே சித்தர், எஸ் ஆழ்வாப்பிள்ளை. அச்செழு: சி காசிப்பிள்ளை. அராலி: எம் சம்பந்தர், தவமணி. மானிப்பாய்: எஸ் செல்லத்துரை, கே வில்லியம். பருத்தித்துறை: பி பாலசுந்தரம், அ பாலசுந்தரம். தெல்லிப்பழை: ஏ மாணிக்கம். கொட்டடி: எஸ் வி சுந்தரலிங்கம்: பெரியகடை: வே அருணசலம். ஐயனார்கோவிலடி: ப தேவசேனாதிபதி: கந்தர்மடம்: எஸ் சோமஸ்கந்தர், திருநெல்வேலி: எஸ் இராசையா, எஸ் கந்தையா. நல்லூர்: சி. ரி. வி. தியாகராசா. நாயன்மார்கட்டு: வி கந்தையா: கொழும்புத்துறை: எஸ் சரவணபவானந்தன், எஸ் கணபதிப்பிள்ளை. வண்ணார்பண்ணை: கே பழனிச்சாமி: வட்டுக்கோட்டை: எஸ் மகேசன். கே தில்லைநாதன், வி சிசபாரட்டினம்: மூளாய்: வி முருகேசபிள்ளை, ஏ திகம்பாலிங்கம். தொல்புரம்: ச பரமலிங்கம், பி அரியரட்ணம். நெல்லியான்: எஸ் விஸ்வலிங்கம். பொன்னாலை: எஸ். பொன்னம்பலம். நயினாதீவு: ஊஸ் பரமேஸ்வரக்குருக்கள் ஈவினை: ரி அப்பாசாமி. மயிலிட்டி தெற்கு: சி தாமோதரம்பிள்ளை, த செல்லத்துரை. மிரிசுவில் ரி சிறி இராமநாதன்.

## இன்று

யாழ்ப்பாணம், திங்கள்

வண்ணை வைத்தீஸ்வரன் ஆலயத்தில் 6ந் திருவிழாவாகிய இன்று மாலை 6 மணி முதல் இரவு 7-30 மணி வரை திரு: வி. நல்லையாவின் கதாப்பிரசங்கமும், சுவாமி ஆட்டுக்கடா வாகனத்தில் வீதி வலம் வருதலும், இரவு 8-30லிருந்து 9-30 வரை சங்கீதபூஷணம் திரு. ஏ. எஸ். சண்முகரத்தினத்தின் இன்னிசைக் கச்சேரியும் நடைபெறும்.

... மென்றும் 1-4-66ம் திகதி தொடக்கம் தொழிலாளர்களுக்கு மாற்றப்பட்ட வேதனம் படிப்படியான சம்பள மாற்றம் மற்றும் இரண்டு மாத ஆதாயப்பணம்கொடுபட வேண்டுவதுடன் 14 நாட்கள்வரை சம்பளமற்ற லீவு எடுக்கும் தொழிலாளருக்கு ஆதாயப்பணத்தில் கழிக்கக் கூடாது எனவும் இவர்கள் கேட்டுள்ளனர்.

ஓய்வுகாலநன் கொடை ஒருவருட சேவைக்கு ஒரு மாத சம்பளவீதப்படி வழங்

## யாழ். நகரில் ஸ்ரீலங்கா சுதந்திர கட்சிக் கிளை

யாழ்ப்பாணம், திங்கள்

ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் யாழ்ப்பாணக் கிளையின் அங்குரார்ப்பணக் கூட்டம் வருகிற புதன்கிழமை நடைபெறவிருக்கிறது.

இதுவரை வடபகுதியில் உடுவில், காங்கேசன்துறை, வட்டுக்கோட்டை, கோப்பாய், உடுப்பிட்டித் தொகுதிகளில் கிளைகள் அமைக்கப்பட்டுவிட்டதாகச் சுதந்திரக் கட்சியின் வடபகுதி அமைப்பாளர் திரு. மா. துரைராஜா தெரிவிக்கிறார்.

கோப்பாய்த் தொகுதியில் சென்ற தேர்தலில் லங்கா சமசமாஜக்கட்சி சார்பில் போட்டியிட்ட திரு. மா. துரைராஜாவும், பருத்தித்துறையில் வேலையற்ற பட்டதாரிகளுள் திரு. கணேசும் ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி சார்பில் எதிர்வரும் தேர்தலில் போட்டியிடுவார்கள் என வடபகுதி அமைப்பாளர் தெரிவிக்கிறார்.

யாழ்ப்பாணம், திங்கள்

பாலைதீவுப் படகு விபத்து சம்பந்தமாகக் கைதுசெய்யப்பட்டுப் பொலிஸ் பாதுகாப்பில் வைக்கப்பட்டிருந்த பிலிப் ஜஸ்டின், அருளப்பு சந்தியாகோ ஆகிய இருவரும் யாழ்ப்பாண மாஜிஸ்திரேட் முன் ஆஜர்செய்யப்பட்டு தலா ஆயிரம் ரூபாய் பிணையில் செல்வதற்கு அனுமதிக்கப்பட்டனர்.

### சடலம் அடக்கம்

பாலைதீவுப் படகுவிபத்தில் சிக்கி மாண்டதாகக் கருதப்பட்டதும் குறிகசட்டுவானில் இரண்டு தினங்களுக்கு முன் கரை சேர்ந்த ஒரு பெண்ணின் சடலம் நேற்றுக் காலை கார்த் தொழிலாளர் கொடுத்த நிதியினால் அடக்கஞ்செய்யப்பட்டது. அந்தப் பெண்ணின் சடலத்திலிருந்த காப்பு, தாலிக்கொடி என்பன ஊர்காவற்றுறைப் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன

கிண்ணியா, சனி

சிறுபான்மையினருக்கு ஒரு பல்கலைக் கழகம் அமைக்கப்படும்போது வித்தியோதய வித்தியாலங்கார பல்கலைக் கழகங்களில் பிரதான போதனா மொழியாய் சிங்களம் இருப்பதுபோல் உத்தேச பல்கலைக் கழகத்தில் தமிழ் பிரதான போதனா மொழியாக இருக்கவேண்டுமென பல்கலைக்கழக விசாரணைச் சபையின்முன் கிழக்கிலங்கைத் திருக்கோணமலைத் தமிழாசிரியர் சங்கத் தூதுக்குழுவினர் சாட்சியமளிக்கையில் வற்புறுத்தினர்.

# கச்சதீவுக் கடலில் கள்ளக்கடத்தல்

## அபராதமும் பறிமுதலும்

யாழ்ப்பாணம், திங்கள்

கச்சதீவுக்கடலில் கள்ளக்கடத்தலில் ஈடுபட்டதாக ஒரு படகுச் சொந்தக்காரரையும், அதிலிருந்த சிலரையும் சுங்கப்பகுதியினரும், பொலிஸாரும் கைதுசெய்தனர்.

15 கலன் தேங்காய் எண்ணையும், சர்க்கிறினும், பாலுணவுப் புட்டிகளும் கைப்பற்றப்பட்டதாகக் கூறப்பட்டுள்ளது.

இந்தக் கள்ளக்கடத்தலில் ஈடுபட்டதாகச் சந்தேகிக்கப்பட்டவர்களுக்கு தலா 500 ரூபா அபராதம் விதிக்கப்பட்டதுடன், பொருட்களும் பறிமுதல்செய்யப்பட்டுள்ளன.

வள்ளச் சொந்தக்காரருக்கு 100 ரூபா அபராதம் விதிக்கப்பட்டது

## நியமனம்

சுழிபுரம், சனி

வட்டுக்கோட்டைத் தொகுதி வட்டாரப் பாடசாலைகளின் வித்தியாதிகாரியாக கடமையாற்றிவரும் திரு என். குமாரசாமி முதலாம்தர கல்லூரி அதிபராக தெரிவு செய்யப்பட்டுள்ளார்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org